புதினப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

# இந்துசாதனம்.

ஸ்தாபித வருஷம் (1889) ஆவணி மீ உஉஉ ஆரம்பமானது.

# THE HINDU ORGAN.

## குருவாரந்தோறும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரிக் கிரயம்.**

(முற்பணமாகக் கொடுக்கவேண்டியது.)

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப்பட்டினம்: | ஆ க-க்கு | ரூ. உ-உ-௦. |
| வெளியூர், இந்தியா: | ,, | ரூ. ௩-உ-௦. |
| தொலைப்பகுதி: | ,, | ரூ. ௩-எ-௦. |
| தனிப்பிரதி | சதம் | -0௦. |

**விளம்பர விகிதம்.**

| | | ரூ. ச. |
|---|---|---|
| முதன்முறைக்கு:— | ஒருகலம் | ௩-௦0. |
| ,, | அரைக்கலம் | ௩-00. |
| ,, | கால்கலம் | உ-௦0. |
| ,, | ஒரு அங்குலம் | -௦0. |

அடுத்தமுறைகட்கு டி விகிதங்களில் அரைவாசி.

புத்தகம் - ௩0. { யாழ்ப்பாணம் — காலயுக்தி ஹு கார்த்திகை மீ கஉ; ககூக அம் ஆண்டு நவம்பர் மீ உஅ. } இலக்கம்—உ0

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிழு அணர்ச்சி தேங்கச்
 சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ளீங்கப்
 பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
 பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேறு
 மதம்பூத்த விநாயகன்றுள் வணக்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## விளம்பரம்.

விலை சகாயத்திற்கும்
ஜவுளி நாணயத்திற்கும்
பேர்போன கம்பனி எது?
மதுரை மூ. க.
இராமையர் அன் சன்ஸ்.

எங்கள் ஜவுளிக்கம்பனியில் சுமார் ௪0 வருஷ காலமாக எங்கள் நேர் பார்வையின்பேரில் கைதேர்ந்த நெசவுகாரர்களைக்கொண்டு பல தேசங்களிலுமுள்ள வியாபாரிகளுக்கும் மற்றும குடித்தனக்காரர்களுக்கும் ஏராளமான தினுசுகள் தயார் செய்து கொடுத்துக்கொண்டும், ஏராளமான தினுசுகள் கைவசம் வைத்துக்கொண்டும், விரும்பி எழுதும் தினுசுகளை யாதொரு பிசகின்றி அனுப்பியும் விசேஷ வியாபாரம் செய்து வருகிறோம் என்பது உலகம் பூரா அறிந்த விஷயம். தவிரத் தற்கால நாகரீகத்திற்குத் தக்கபடி பலவூர் அநேக நூதன தினுசுகளும் வரவழைத்து ஸ்டாக்கில் வைத்துக்கொண்டு சொற்ப லாபத்திற்கு நேரிலும், வீ பீ யிலும் அனுப்பிக்கொண்டு வருகிறோம். அசலூர் ஆர்டர்களை உடனேக் குடன் கவனித்து வீ பீ யில் அனுப்புவோம்.

F. M. S. பெடரேடெட்மலாய்நாடுகளில் இருப்பவர்கள் ஆர்டருடன் முற்பணம் அனுப்பவேண்டும் அல்லது பாங்க் மூலமாய் பெற்றுக்கொள்ளலாம். சிங்கப்பூர், பினங்கு என்னும் இடங்களுக்கும் வீ பீ யில் அனுப்புவோம்.

எங்கள் ஜவுளி விபரம் விலை யாப்தா (Catalogue.) இனாமாக எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

மூ. க. ராமய்யர் அன் சன்ஸ்
சுதேசி ஜவுளி வியாபாரிகள்.
மேலைக் கோபுரவீதி
மதுரை.

சாலாமிஸ்ரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள்மாத்திரமல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்துவருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, ருமாஸ்தகா, பீதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அபரகபஸ்பம், லங்கபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணிப் பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, சூலைவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லியவியாதிகள் சுகமாவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள்; பால் விர்த்தியாகும்.

இந்த லேகியத்தின்விலை இருத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரைருத்தலுக்கு ரூபா க0. கால் ருத்தலுக்கு ரூபா ௫. தபாற் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர், பினங்கு முதலிய தொடுவாய் இராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணி ஓடர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளை,
ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,
இல. 96 முதல் குறுக்குத்தெரு, கொழும்பு.

பவளக்கொடிச்சேலை

மிகநேர்த்தியானது

16 முழநீளம்! உழைக்கத்தக்கது

இந்தச் சேலைகள் வெள்ளை மல்லில் சிவப்பு, கறுப்புச்சேர்ந்த சாக்லேட் நிறம்



போல் பவளக்கொடிகள் போட்டுச் சுற்றிலும் சிறுகரை கட்டியிருக்கின்றன. இது புதுமாதிரி இதுவரைக்கும் தயாரானதில்லை. இக்காலத்துக்கு மிகவும் உபயோகமானது. இதை ஒவ்வொரு ஸ்திரீகளும் தரித்துக்கொண்டு அலங்கார பூஷிதர்களாய்ச் சந்தோஷப்படுவீர்களென்று நம்புகின்றோம்.

சேலை ஒன்றுக்கு விலை ரூபாய் 4-8-0.

பட்டுக்குட்டை.

5 முழநீளம் 2½ முழ அகலம் இது மிகவும் நேர்த்தியாகவும் பளபளப்பாகவும் பிரகாசிக்கும் இதில்பலவித நிறமுண்டு. குட்டை 1க்கு விலை 2-8-0 விஷயை குறிப்பிட்டு எழுதவும். சிங்கப்பூர், செட்டால் முதலிய தூரதேசங்களுக்கு வி. பி. யில் அனுப்பமுடியாது.

கனக அண்டு கம்பெனி,
பார்க்டவுன் போஸ்டு, [illegible].

விளம்பரம்.

நேத்திரரோகிகட்கோரறிவித்தல்.

கண்களிலுண்டாகும் எவ்வித நோய்களுக்கும் எற்க ஆயுள்வேதமுறைப்படி என்னுலாக்கப்பட்ட முதற்றரமான தைலங்கள், ஒளஷதங்கள் முதலியனகொண்டு நேத்திரவைத்தியம்நடத்திவருகின்றேன். காலை 8மணிமுதல் 10மணிவரையுமென்து மருந்துசாலையில் நோயாளர் சிகிச்சை பெறுவர்.

நாயன்மார்கட்டு, S. சதாசிவம்பிள்ளை.

முதிரை, வேம்பு, பாலை, சோமுந்திரி, பூவரசு,

மேற்சொல்லிய மரங்கள் பலவித நீளத்திலும் சுற்றளவிலும் சசேரிரோட்டில் தராசுகுளத்திற்குச்சமீபமாயுள்ள ஓர் வளவிற் போடப்பட்டிருக்கின்றன.

வாங்க விரும்புவோர் வேண்டிய விபரங்களை யென்னிடம் அறிந்துகொள்ளலாம்.

Dr. A CHINNIA,
Pettah Dispensary,
Jaffna.

புதிய ஜவுளி நூல் கம்பெனி.

நயம் தினிசுகள். சொற்பலாபம். விலை சரசம்.

ஐயா,

அடியிற்கண்ட நம்முடைய ஜவுளிநூல் கம்பெனியில பற்பல [illegible] ளர்களிலிருந்து உற்பத்தியான [illegible] தற்காலத்திற்கேற்ற சாஸ்திரமான தினிசுகளாயும் விலைகள்சரசமாயும் அனுப்பிக்கொண்டுவருகிறோம்.

ஹோம்ரூல் காப்பிக் கலரும், கறுப்பு சிவப்பு 1-ம் நம். 60×40-ம் நம்பா நூல்களில் கரை 1இஞ்சு வைத்து, பச்சைக் கரை சிவப்புக் கரை கறுப்புக்கரைகள் வைத்து முந்தியில் 4 அல்லது 5 இஞ்சு பட்டைபோட்ட 16 முழச் சேலை 1-க்கு ரூபா 7-8-0. டி மாதிரியில் 44×40 நம்பா நூலிற போட்ட 16முழச்சேலை 1-க்கு ரூபா 7-0-0. டி மாதிரி 40×32 நம்பா நூலிற போட்ட 16 முழச் சேலை 1-க்கு ரூபா 6-8-0. இந்த விலைகளில காப்பிக் கலர்ச்சேலையானாலும பிளேன் கறுப்புச்சேலையானாலும ஒரேவிதமான தினிசுகள் புதிதாய் உறபத்திசெய்திருப்பதால விலைகள் கண்டு எழுதியிருக்கிறோம. இன்னும மறற பஞரிஸ், பெங்களூர், கோயம்புத்தூர், சேலம, ஆரணி, காஞ்சிபுரம, கொரநாடு, கும்பகோணம, தஞ்சாவூர், திருச்சிறுப்பள்ளி, உள்ளூர், இன்னும அநேக ஊர்களிலிருந்து ஏராளமாயத் தருவித்து வைத்திருக்கிறோம. தாஙகளும் வேணடும தினிசுகளுக்கு 100-க்கு 10 வீதம அட்வான்ஸ் அனுப்பினால தினிசுகள் அனுப்பப்படும்.

தாங்கள் நமது கமபெனியில் ஒருமுறை தினிசுகள் தருவித்துப்பார்த்தால எபபோதும நம்முடைய கமபனிக்கே ஆடர்செய்வீர்கள். தவிர வேறு எவ்விடத்திலிருந்துந்தருவிக்கமாட்டீர்கள.

தவிர 10-ம் நம்பர், 20-ம் நம்பர் நூல்களில் நாட்டு கெட்டி சிகப்பு 1-ம தரம், 2-ம தரம், 3-ம தரம் நூலகளில வாணம தந்து, கணணல சாயத்தில் 5 ருத்தல கட்டுகளும, சீமைக கெட்டிச சாயம் கறுப்பு மாதிரி 10-ம நமபர் 20-ம் நமபர் 30-ம நம்பர் 40-ம நம்பர் நூல்களில் கெட்டிச சாயமுள்ள 5 ருத்தல் பெட்டிகளும் விலைகள் நயமாயும் இழைப்புக்கு சிதறலாமலும நயமான நூல்கள் தயாராகின்றன. தேவையுள்ளவர்கள் வி. பி. மூலம் ஆடர் செய்துகொள்ள வேண்டியது.

N.B. ஆடர்கள் உடனே தவறின்றி அனுப்பப்படும. வி. பி. சார்ஸ் பிரத்தியேகம்.

இப்படிக்கு,

M S. Ramaswamy Iyer & Company,
Cloth & Yarn Merchants,
Singara Topu Street,
Madura, S. India.

26-10-18.

பிரகடனம்.

பிள்ளையார்கதை (சுத்தப்பதிப்பு) விலை சதம் 12.

சோமவாரவிரத மான்மியம் தோத்திரத்திரட்டுடன் (புதியபதிப்பு) விலை சதம் 10.

மானேசர்,
சைவப்பிரகாச யந்திரசாலை,
வண்ணார்பண்ணை.

சுதேச வைத்திய ரத்தினம்.

முன்பதிப்புகளைக்காட்டிலும் விரிவானது.

மூன்றவதுபதிப்பு சித்திரப்படங்களுடன் கூடியது.

இப்புத்தகத்தில் தினந்தோறும் நமது காலடியில் மிதிபடும் புல், செடி, கொடி, காய், கனி, பட்டை, கட்டை, வேர், இலை, பூ, பிசின், வித்து முதலியவைகளைக் கொண்டும், நமது நாட்டுக் கடைகளில் சாதாரணமாய்க் கிடைக்கக்கூடிய கடைச்சரக்குகளைக்கொண்டும் வைத்தியர் உதவியின்றி, அவரவர்களே சூரணமாகவும், பஸ்பமாகவும், செந்தூரமாகவும், மாத்திரையாகவும், காஷாயமாகவும், வடகமாகவும், மெழுகாகவும், லேகியமாகவும், திராவகமாகவும், களிம்பாகவும், பிளாஸ்திரியாகவும் இந்திய ஆயுர்வேத முறைப்படியும், இங்கிலிஷ் வைத்திய முறைப்படியுஞ் செய்து, சாதாரண வியாதி முதல் பெரிய வியாதியும் நாட்பட்டதுமானவைகளுக்கும், உபயோகிக்கவேண்டிய விதத்தையும் அளவையும், ஒவ்வொரு பதார்த்தங்களுக்கும் தமிழ், இங்கிலிஷ், லத்தின் முதலிய பாஷைகளிலுள்ள பல பெயர்களுடனும் விபரமாய் வரையப்பட்டிருக்கின்றது. இன்னும் இப்புத்தகத்தில் வியாதிகளை இலகுவாய்த் தெரிந்துகொள்ள "ரோக அட்டவணை"யும், ஒவ்வொரு வியாதிகளுக்கும் தமிழ் இங்கிலிஷ் பெயர்களுடனும், ஒவ்வொரு வியாதிகளுக்கும் உபயோகிக்கவேண்டிய ஒளஷதங்களும் எழுதப்பட்டிருக்கின்றது. சுருக்கச் சொல்லுமிடத்து தேக ஆரோக்கியத்தையும், நோயில்லா வாழ்வையும், சுகசெல்வநன்மைகளையும் அளிக்கக்கூடியபுத்தகம் இதுவேயன்றி வேறில்லை. 670 பக்கங்களுள்ளது. கலிக்கோ பைண்டு ரூபா 3. தபால் சார்ஜ் அணா 4. "பெதர் வெயிட்" என்னும் விலையுயர்ந்த பேப்பர் பதிப்பு கலிக்கோ பைண்டு ரூபா 3, அணா 8. தபால் சார்ஜ் அணா 5. சிங்கப்பூர் முதலிய அன்னிய நாடுகளுக்குத் தபாற் செலவு அணா 8.

"நமது சிறிய சத்துருக்கள்" அல்லது பிளேக், கலரா, மலேரியா முதலிய கொள்ளைநோய்களின் உற்பத்தி விபரமும், அவற்றிற்கான பரிகாரங்களும். தபாற்செலவுடன் அணா 8.

மானுட ஜீவிய சிந்தாமணி அல்லது ஆண்மையின் அழிவும், அதனையகற்றும் விதமும். ஸ்டிப் பைண்டு ரூபா 2. கலிக்கோ பைண்டு ரூபா 3. தபாற்செலவு அணா 3. கோலாலம்பூர் முதலிய அந்நியநாடுகளுக்குத் தபாற்செலவு அணா 6.

விலாசம்:—டாக்டர் எஸ். சந்திரசேகரர், கும்பகோணம்.

JAFFNA CO OPERATIVE STORES LTD.

யாழ்ப்பாண ஐக்கியவியாபாரசங்கம்.

இச்சங்கம், கொம்பனிக் கட்டளைச்சட்டப்பிரகாரம் பதிவுசெய்யப்பட்டது.

ஒருபங்கு நூறு ரூபாயுள்ள ஆயிரம் பங்குகள் கொண்ட ஒரு லட்சம் ரூபா முதலுள்ளது.

சங்கத்தின் நோக்கம்: அரிசி, நெல், புடைவை, காய், தானிய முதலிய பல சாமான்களிலும் வியாபாரம் நடத்தல்.

1918-ம் ஆண்டு ஆகஸ்ற் மாதம் 26-ந் திகதிக்குச் சரியாய் நிகழும் காலயுக்தி வருஷம் ஆவணி மீ க0உ திங்கட்கிழமை காலமே சூரியோதயத்தில் நிகழ்ந்த சுப முகூர்த்தத்திலே வியாபாரத் தொழில் தொடங்கிக் கிரமமாகநடைபெறுவருகின்றது. இன்னும் 500 பங்குகள் விற்பனவுகிருக்கின்றன. விரும்பியவர்கள் சங்கத்தின லேககருக்கு மனு அனுப்பும்படி கேட்கப்படுகிறார்கள்.

M. Asaipillai,
லேககர்,
J. C. S. Ltd.

பனைமரங்கள்.

அழுத்தமாய் வெட்டப்பட்டனவும், சிறந்த வயிரமுள்ளனவுமாகிய பனைமரங்கள் யாழ்ப்பாணம் வை. ஆ. அவர்களுடைய வளவின் மேற்குப் பாகத்தில் விற்பனவுக்கிருக்கின்றன. விலை மிகவுஞ் சரசம். ஒருமுறை பரீட்சித்துப்பார்க்கவும்.

சிற்றம்பலம் சின்னத்தம்பி,
சண்டிருப்பாய்.

விளம்பரம்.

தேவாலயங்களுக்கு உபயோகமான திறம் பட்டுக்குடைகள், ஆலவட்டம், கொடி, சுருட்டி, ஜாலர், மகரதோரணம், காவடிசகலாத்து, முதலானவைகள் இந்தியாவில் சித்திரவேலைக்காறர்களால் செய்யப்பட்டு நமது சாய்ப்பில் சகாயமான கிரயத்திற்கு கொடுக்க விருக்கின்றன. இன்னும் அவர் அவர்கள் கேட்கும் ஓடர்களுக்குத் தக்கமாதிரிதயாரித்துக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறோம்.

இப்படிக்கு,
மு. நாகலிங்கம் அன் சன்ஸ்
பறங்கித் தெரு,
யாழ்ப்பாணம்.

## பிரகடனம்.

1919-ம் ஆ. டிசம்பர் ஜூனியர், ஸினியர் பரீட்சைகட்கு வித்தியாபகுதியாரால் நியமிக்கப்பட்ட தமிழ்ப்பாடங்கட்குரிய புத்தகங்கள் உரையுடன் எம்மிடத்திற் பெறற்பாலன.

ம. வே. திருஞானசம்பந்தன்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித்தமிழ்ப்பண்டிதர்,
வண்ணார்பண்ணை.

## யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை தானவரவு

திருநெல்வேலி காயாரோகண சுவாமி கோயிலர்ச்சகர் பிரமஸ்ரீ. சி. சபாபதிக்குருக்களவர்கள் தாம் புதிதாயமைத்த கிருகத்தில் பிரவேசஞ் செய்தபோது எமது சபைக்கு உதவியனுப்பிய ரூபா 1. சதம் 50 பெற்றும்.

சித. மு. ப. சிதம்பரநாதச்செட்டி,
தனாதிகாரி.


# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்: காலயுத்தி௵ கார்த்திகை௴ சஉ௳


## புதியவரிகள்.

கசுகடு-ம் ஆண்டில் யுத்த செலவின் பொருட்டு வருஷம் ஒரு லட்சம் பவுண் வீதமாகப் பத்துலட்சம்பவுண் இலங்கையிலிருந்து அனுப்பத் தீர்மானித்து இப்பணத்திற்காக ரப்பர், தேயிலை, கொப்பரு முதலியனவற்றிற்கு ஏற்றுமதித் தீர்வை விதிக்கப்பட்டது. பின் சென்ற வருடத்தில் மேலும் பத்துலட்சம்பவுண் அனுப்ப வேண்டுமெனத் தீர்மானித்து அப்பணத்திற்காக வேறும் சிலபுதியவரிகளேற்படுத்தப்பட்டன.

யுத்த முடியும்போது நமது தேசத்திலுள்ள கஷ்ட வரிகளெல்லாம் நீக்கப்பட்டு நியாயமான வரிகளே விதிக்கப்படுமென நாமெல்லாம் காத்திருந்தோம். ஆயின் நமது புதிய தேசாதிபதியவர்களின்கீழ் முதன் முதற்கூடிய சட்டநிருபணசபையிலே ஜர்மனியர் சரண்புகுந்த சந்தோஷ செய்தியறிவிக்கப்பட்ட சமையத்திலேயே சனங்களை விசேஷமாய் வறிய சனங்களைப் பெருங் கஷ்டத்துக்குள்ளாக்கக்கூடிய பல புதிய வரிகளையேற்படுத்த அரசாட்சியார் தீர்மானித்திருக்கின்றனர்.

சென்ற கஅ-ம் தேதி கூடிய சட்டநிருபணசபையிலே நமது தேசாதிபதி சேர் உவில்லியம் மனிங் அவர்கள் ரப்பரின் விலை குறைந்துபோனமையால் அதற்கு விதிக்கப் பட்டிருக்கும் ஏற்றுமதித் தீர்வையை நீக்கிவிட வேண்டுமென்றும், அதனை நீக்கும்போது அரசிறைவரும்படியில் ஏறக்குறைய 27,55,000 ரூபாவரையில் குறையுமென்றும், இக்குறையை நிவிர்த்தி செய்வதற்கு சில உறுதிகளின் பதிவு முத்திரைச் செலவை அதிகப்படுத்த வேண்டுமென்றும், "சிக்கறற்று"களின் இறக்குமதித் தீர்வையை உயர்த்த வேண்டுமென்றும், புகைரதச் சலாரைக் கூட்டவேண்டுமென்றும், உரிமைத் தத்துவமுத்திரைச் செலவை அதிகப்படுத்த வேண்டுமென்றும் கொப்பருவுக்கு முன்போல ஏற்றுமதித்தீர்வை விதிக்கவேண்டுமென்றுங்கூறினர்.

அடுத்தநாள் கூடிய மேற்படி சபையில் ரப்பர் ஏற்றுமதித்தீர்வையை நீக்கவேண்டுமென்னும் நிர்ணயம் கொண்டுவரப்பட்டு சபையாரின் அங்கீகாரம் பெற்றது. மேலும் மேற்படி தேதியிலேயே சிக்கறற்றுகளுக்கு இறக்குமதித் தீர்வை விதிக்கப்படவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. தபால்முத்திரைவரியை உயர்த்தவும் புகைரதச் சலாரை உயர்த்தவும் தேசாதிபதியவர்களின் சட்டநிருவாக (Executive) சபைக்கு அதிகாரமுண்டாதலாலவர்களவ்வதிகாரத்தைக் கொண்டு முத்திரைவரியையும், புகைரதச்சலாரையுமுயர்த்தியிருக்கிறார்கள். சிக்கறற்றுகளுக்கு இறக்குமதித் தீர்வை யேற்படுத்தியதால் யாதும் கஷ்டமுண்டாக மாட்டாது. ஆயின் தபால்முத்திரைவரி தந்திமுத்திரைவரிகளை யுயர்த்தியதும் புகைரதச் சலாரை யதிகப்படுத்தியதும் சரியன்று. தபால்முத்திரை வரியேற்றத்தால் வருஷம் ௱,எ0,000 ரூபா வருமென்றும், புகைரதச் சலார் ஏற்றத்தால் எ,எ000 ரூபா வருமென்றும் நமதரசினர் மதிப்பிட்டிருக்கிறார்கள். தபால் முத்திரைச் செலவும்புகைரதச்சலாரும் எவ்வளவு கூட்டப்படுகின்றனவோ அவ்வளவாக அவற்றால் வரும்வரும்படி குறையுமன்றிக் கூடமாட்டாது. ஒருதபாலுக்கு உ௦ சதமுத்திரை ஒட்டவேண்டுமென விதித்தால் இப்போது தபாலனுப்பு மனோரதனை நிறுத்திவிடுவாரன்றோ? இப்போ ௫ சதமாகவிருந்த உள்ளூர் தபாற்செலவை ௬ சதமாக மாத்திரம் உயர்த்தியிருப்பினும், இவ்வேற்றம் காரணமாகப்பல வறிய சனங்கள் தபால்களனுப்புவதை நிறுத்திக்கொள்ளக்கூடும். உள்ளூர்த் தபால்களிலதிக குறைவுண்டாகா திருப்பினும் சிங்கப்பூர் முதலிய விடங்களுக்கு அனுப்பப்படும் தபால்களிலதிக குறைவுண்டாகுமென்றே நினைக்கின்றோம். ஒரு தபாலுக்கு ௬ சத முத்திரை யொட்டியனுப்ப இயலாது பல ஏழைச் சனங்கள் தபால்களனுப்புவதை நிறுத்திக்கொள்வரென்றே நினைக்கின்றோம். புகைரதச் சலாரைக் கூட்டியதால் எத்தனையோ சனங்கள் பிரயாணஞ் செய்ய இயலாதவர்களாவார்கள். உறுதிப்பதிவு முத்திரையேற்றத்தைப் பற்றியும், உரிமைத் தத்துவ முத்திரை வரியேற்றத்தைப்பற்றியும் இன்னும் முடிவு செய்யப்படவில்லை. உறுதி முத்திரைச் செலவு முன்னரே ஏற்றப்பட்டிருக்கின்றது. இன்னும் உறுதிகளின் செலவை ஏற்றினல் அதிககஷ்டமுண்டாகு மென்பது நாம் சொல்லவேண்டியதில்லை.

உரிமைத் தத்துவ வரியைப்பற்றிக் கொண்டுவரப்பட்டிருக்கும் சட்டம் அரங்கேறுமாயின் பெருந்தொகையான ஆதனங்களை விட்டிறப்போரின் உரிமைக்காரர் சிலவேளைகளில் அவ்வாதனங்களில் தமக்கொரு சிறிதும் சேரப்பெறாதவாகவுங்கூடும். இச்சட்டப்படி உரிமைத் தத்துவவரி ஒருலட்சரூபாவரைக்கும் படிப்படி உயர்த்தப்பட்டு ஒருலட்சம்ரூபாவுக்கும் அதற்குமேற்பட்டதொகைக்கும் நூற்றுக்குப் பத்துவீதம் வரிவிதிக்கப்படும். ஒருவர்க்கு உரிமைவழியால் லட்சம்ரூபாய்க்குமேல் பெறுமதியுள்ள ஆதனம் வருமாயின் அதற்கு உரிமைத் தத்துவமெடுக்கும் செலவுக்கு அவர் ஒருபோது பணம்கடனாப்பெறவேண்டிவரும். கடன் வாங்கி உரிமைத்தத்துவமெடுக்கும்போது அக்கடனுக்கே ஆதனம் முழுவதையும் விற்கவேண்டியதாய் வரக்கூடும்.

ரப்பரின் ஏற்றுமதித் தீர்வையால் நட்டமடைந்தோர் ரப்பர் செய்கையை நடத்திவந்த சிலரேயாவர். ஆனல் ரப்பர் ஏற்றுமதித் தீர்வைக்குப்பதிலாக விதிக்கப்பட்டும் விதிக்கப்படவு மிருக்கும் வரிகளோ இலங்கையிலுள்ள சகலரையும் பெருங் கஷ்டத்துக்குள்ளாக்கும். இத்தீர்வை நீக்கப்பட்ட நாளுக்கடுத்தநாளிலேயே ரப்பரின்விலை லண்டனில் ஏறியிருக்கின்றது. ரப்பரின் விலை ஏறக்கூடியதாயிருக்கவும் அரசாட்சியார் ஆத்திரப்பட்டு அதற்கு விதிக்கப்பட்டுவந்த ஏற்றுமதித் தீர்வையைநீக்கி அதனிடத்தில் தாங்கற்கரிய கடும் வரிகளை ஏற்படுத்தத் தீர்மானித்தது பெரிதும் துக்கப்படத்தக்கதே.

## வெள்ளத்தால் நஷ்டமடைந்தவர்களுக்குச் சகாயஞ்செய்தல்.

ஏலவேநிகழ்ந்த பெரு வெள்ளத்தால் தங்கள் உணவுப்பொருட்களையும் வீடுகளையும் ஆடுமாடுகளையு மிழந்து அவதிப்படும் ஏழைச்சனங்களுக்கு நம்மூரிலுள்ள தருமசிலர்பலர் அரிசி காய்கறி விறகுமுதலியன கொடுத்துதவிவருகின்றதுமன்றி அவர்களின் சகாயத்தின் பொருட்டுச் சேர்க்கப்படும் நிதிக்குப் பணமுங்கொடுத்து வருகின்றனர். குத்தகைக்காரன் ஸ்ரீ. கிருஷ்ணர் கதிரேசபிள்ளை யவர்கள் ஏழைச் சனங்களுக்கு பல மூடை அரிசியும் காய்கறிகளும் கொடுத்துதவியதுமன்றி மேற்படி நிதிக்கு ரூபா 500 கொடுத்திருக்கின்றனர். ஓர் பிரபலதனவந்தரும், குத்தகைகாரனுமாயிருந்து காலஞ்சென்றபோன சங்குவேலி ஸ்ரீமாந். வைத்திலிங்கபிள்ளை யவர்களின் புத்திரன் ஸ்ரீ. மார்க்கண்டு அவர்கள் மேற்படி நிதிக்கு ஆயிரம் ரூபா கொடுத்திருப்பதுமன்றி மூன்று உருக்களில் நெல் அழைப்பித்துக் கொள் விலைப்படி விற்கவும் ஒழுங்குசெய்திருக்கின்றனர். கந்தர்மடம் ஸ்ரீ. வல்லிபுரமவர்கள் வெள்ளத்தாலதிக சேதமடைந்த இடங்களுக்கு அரிசியும் விறகும் கொண்டுசென்று பசியால் வருந்திய சனங்களுக்குக் கொடுத்துதவினர். வேறுசிலரும் தங்களாலியன்ற உதவி செய்தார்கள். இவர்களைப் பின்பற்றி இன்னும் பலர் சகாயஞ்செய்ய முன்வருவார்களென்றே நினைக்கின்றேம்.

அநேகர் உணவின்மையால் மாத்திரமன்று தங்கள் வீடுகளையும் ஆடுமாடுகளையும் இழந்து அவதிப்படுகிறார்கள். வீடில்லாதவர்கள் வீடுகள் கட்டிக்கொள்வதற்கும் ஆடுமாடுகளில்லாதவர்கள் அவற்றைப் பெற்றுத் தங்கள் கமத்தொழிலை நடத்திக்கொள்வதற்கும் உதவி செய்ய வேண்டியிருக்கின்றது இதையுணர்ந்தே நமது ஏசன்றரவர்கள் ஓர் நிதி சேர்ப்பதற்கு உள்ளூரிலுள்ளவர்களின் உதவியை மாத்திரமன்று பிறவூரிலுள்ளவர்களினுதவியையுங்கேட்டிருக்கின்றனர். சிங்கப்பூர் முதலியவிடங்களிலுள்ள தருமசிலர்கள் இந்நிதிக்குத் தங்களாலியன்ற பொருளுதவுவார்களென்றே நினைக்கின்றோம்.

## நம்மவர் படும் பாடு.

சிலகாட்களாக, இந்த யாழ்ப்பாணப் பகுதியிலுள்ளநம்மவர் அரிசிநெல்லில்லாமற் படும் கஷ்டமோ சொல்லுந்தரத்ததன்று. ஒரு சேர் சம்பா அரிசி 42 சதமும் ஒருமூடை 27 ரூபாவுமாகச் சென்றவாரம்வரையில் விலைப்பட்டது. கல்லுண்டையரிசி ஒருசாக்கு 22 ரூபா 60 சதம்வரையில் விலைப்பட்டது. ஒருபுஷல் நெல் ரூபா 3 சதம் 40 வரையில் விலைப்படுகின்றது. ஆனல் சென்றவாரந் தொடக்கம் ஒரு வகையான அரிசியும் எந்த விலைக்கும் அகப்படவில்லை. கடைகளில் அரிசி முற்றாயில்லையென்று கடைக்காரர் சொல்லிவிடுகின்றார்கள். அரிசிக்கடைகளில் அடுக்கப்பட்ட அரிசிமூடைகளெல்லாம் மாயமாக மறைந்தனபோலத் தோற்றுகின்றது. எங்காயினுங் கடைகளில் இரண்டொருசாக்கு அரிசியிருந்தால் அது கடைக்காரரின் உபயோகத்திற்காக உள்ளதென்று சொல்லப்படுகின்றது. ஏழைச் சனங்கள் சில தினங்களாக குறுணைப் பச்சையரிசியை வாங்கியும், நெல்லை வாங்கி அவித்துக் காயப்போட்டுக் குற்றி உண்ணுதற்கு மழை விடாமையால் பச்சையாகக்குற்றி அவ்வரிசியையும் பெற்றுச் சமைத்துச சாப்பிடலாயினர். நாட்டுப்புறத்திலுள்ள சனங்கள் உணவின்பொருட்டுத் தேடிவைத்த தினை, சாமை, குரக்கன், வரகு, பனையொடியல், மரவள்ளியொடியல்என்னுமிவற்றையெல்லாம் வருணபகவான் அள்ளிக் கொண்டுபோயது. பஞ்சந்தாங்கி யென்னும் மரவள்ளிக்கிழங்கு இரண்டடி ஆழத் தண்ணீரு விருக்கின்றது. நமது யாழ்ப்பாணத்தவர்களோ எத்துணைப் பஞ்சம் வந்தாலும் அதனை வெளியே காட்டாமற் சஞ்சரிக்கும் வல்லபமுள்ளவர்கள், கடைசிவரையில் நின்றுபிடிக்கத்தக்கவர்கள்; உண்ணுமல் உசாராகத் திரிவதில், யாழ்ப்பாணத்தவருடன் மற்றுமிடங்களி லுள்ளவர்கள் நிற்கமாட்டார்கள். ஆனல் இத்தமுறை நம்மவர்களைப் பஞ்சம் வென்றுவிட்டது. அரிசிமாத்திரமன்றி உணவுக்குரிய மற்றைய பொருட்களும் புடவையும் சென்ற இரண்டுவருடம்வரையில் நாளுக்குநாள் விலையேறிவந்தன. நவீனசுரம் பரவி இரக்கமின்றிச் சிலரைக் கொன்றும் பலரை நடைப்பிணமாக்கியும் விட்டது. செய்த கமமுயற்சிகளையும் குடியிருந்த வீடுகளுட் பலவற்றையும் பாடுபட்டுத் தேடிப் புதைத்துவைத்த பணத்தையும் கமத்தொழிலுக் கின்றியமையாதிருந்த ஆடுமாடுகளையும் பெருமழையால் நேர்ந்த வெள்ளஞ் சேதப்படுத்திவிட்டது. இக்காரணங்களிஞலேயே நாம் இத்துணை இடருக்குளாளேம்.

உணவுக்கு அரிசி வேண்டுமேயானல் இப்பொழுது எஜமானனுயுள்ளவன் தன் வேலைகாரரையனுப்பிக் கடையில் வாங்குவித்துக்கொள்ளுதல் முடியாது. எஜமானனே தன்னுடைய உத்தியோகத்திற்கோ அன்றேல் மற்றுந் தொழிலுக்கோ போகுதற்குமுந்தி வேலைகாரனுடன் கடைக்குச் சென்று கேட்ட பணத்தைக் கொடுத்துப் பல்லைக்காட்டி இன்சொற்கூறிப் பரிந்து கேட்டால் கேட்டதொகை அரிசியில் ஒருபாகங் கிடைக்கும். இவர்கள்பாடு இப்படியானல் அன்றடித்தன்று வயிறுவளர்க்கும் ஏழைகளின் நிலையென்னாகும். பெரியகடைக் கணித்தாகவுள்ள ஒரு பிரசித்த தெருவிலே உண்மையான ஒரு தேசாபிமானி சிலமணிநேரம் நின்றால், அரிசிக்கென்றுபோய் மீண்டு செல்லும் வெறுவண்டிகளையும், அரிசி எந்த விலைக்கும் கிடையாமையினல் வெறுஞ்சாக்கும் வெறும் பெட்டியுங் கொண்டு வயிற்றுக்கொதியினல் கடைக்காரனையோ தெய்வத்தையோ திட்டிப் பிரலாபித்து வீட்டிற் போய்ச்செய்வதின்னதென் றறியாமல் யோசித்துச் செல்லும் ஏழைகளையுங் காணலாம்.

அரிசிவியாபாரிகளிடத்தில் அரிசி முன்போலதிகமில்லாவிட்டாலும் இப்பொழுது அரிசி அவர்கள் சொல்லுகிறபடி முற்றாயில்லையென நம்ப இடமில்லை. அரிசி மூடைகளை எல்லாரும் ஒத்து வசதியாக ஒதுக்கிவைத்திருக்கின்றார்களெனவே சனங்கள் எண்ணிக்கொள்ளுகிறார்கள். திடீரென அரிசி மூடைகள் கடைகளிலிருந்து மறைந்தமையினலும், செல்வாக்குள்ள சிலர் எத்தக்காலத்திலும் மறைவாக அரிசி வாங்கத்தக்கதாயிருப்பதினலும், கடையின் அடி உட்புறத்தே அரிசிமூடைகள் இடையிடையே எட்டிப்பார்க்கிறதினலும், சனங்கள் சொல்லுவது தப்பெனச்சொல்ல இடமில்லை. இங்கே அரிசிநெல் வியாபாரஞ் செய்பவர் பெரும்பாலார் நாட்டுக்கோட்டைச் செட்டிபபிள்ளைகள். இவர்கள் நெடுங்காலமாக இவ்வியாழ்ப்பாணத்தில் வந்து வியாபாரஞ்செய்து பல்கோடிக்கணக்கான பணத்தை ஈட்டியவர்கள். இப்பொழுது யாழ்ப்பாணத்திலுள்ளவர்கள் சாத்திராத பஞ்சத்தினல் சங்கட முறக்கண்டு, இவர்கள் தாஞ் செய்யும் வியாபாரத்தில் லாபும்பாராது அரிசி நெல் முதலியவற்றை விற்று இப்பேரிடர் களைவரேல் இவ்வூரவர்களின் நன்றியையும் புகழையும் புண்ணியத்தையும் பெறுவர். பஞ்சம் நீங்கியபின் பழமைபோலத் தங்கள் வியாபாரத்தை நடத்தலாம். ஐயோ! மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை, தானம், தவம், உயர்ச்சி, தாளாண்மை, தேனின் கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும் பசிவந்திடப் பறந்துபோமல்லவா? ஒருநாளுணவை யொழியென்றால்ஒழியாது, இருநாளைக் கேலென்றால் ஏலாது நமமுடைய இடும்பைகூர் வயிறு. ஆதலாலிச்சமயத்திலன்றோ பேருதவிசெய்வோர் செய்தல்வேண்டும்.

நமது யாழ்ப்பாணவாசிகள், மேலைத்தேசத்திலும், இந்தியாவிலும், இலங்கையிலே கொழும்பு மட்டக்களப்பு முதலியவிடங்களிலும் பெருமழை, புயல், ஆற்றுப்பெருக்கு, இன்னும் இவைபோன்ற பிறகாரணமாகப் பஞ்சங்கள் நேர்ந்தபோது அப்பஞ்சத்தால வந்த இடர் தமக்கு வந்த இடர்போல எண்ணித் தம்மாலியன்ற பொருள் திரட்டி உதவிசெய்தவர்கள். நம்மவர் பிறரிடத்தில் இப்படி யோருதவியைப் பெறவேண்டிய எது முன் ஒருபோதும் வரவில்லை. எப்போதாவது வருமென எண்ணியிருக்கவுமில்லை. நாஞ்செய்த நன்மையைச் சொல்வ தழகல்லவேயென்றால் மானம் முதலிய பத்தும் நீக்கக்கூடிய பசி வந்தவிடத்துக் கொடுத்ததைக் கூறுதலுங் குற்றமாகாதென்க.

நமது கவர்ன்மென்ற் ஏசன்றரவர்கள், இந்தச் சமையத்தில் வெள்ளத்தாலும் பஞ்சத்தாலும் நேர்ந்த விபத்தைத் தமது பரிபாலனத்தின்கீழுள்ள இம்மாகாணத்தினின்றும் அகற்றிவிடுதற்குக் கொண்டிருக்கும் சிரமம் மிகவும் பெரிது. அவர் செய்துவரும் நன்றி இங்குள்ளாரால் என்ஞான்றும் நினைத்திருக்கற்பாலது. அவரது முயற்சியால் இரண்டொருதினங்களில் கொழும்பிலிருந்து அரிசி இங்கே வருமென்று அறிகின்றோம்.

## சமாச்சாரம்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் குருபூசை:—சைவசமயந் தழைத்தோங்கும்படி பிரசங்கங்கள் செய்தும், சைவவித்தியாசாலைகளை ஸ்தாபித்தும், நூல்களைத்திருத்தி அச்சிட்டும், தாமே சில நூல்களைச்செய்தும் தமது காலத்தையும், கருத்தையும், தருமநெறியினீட்டிய பொருளையும், கல்விவிருத்தியிலும், சமயவிருத்தியிலும், பொதுநன்மைக்கேதுவாகிய பல நற்செயல்களிலும் செலவழித்துப் பெரும் புகழ் புண்ணியங்களை ஒருங்குபெறறுவாழ்ந்த ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள் குருபூசை சென்ற ஞாயிற்றுக்கிழமை சிதம்பரத்திலும், யாழ்ப்பாணத்திலுமுள்ள அவர்களது சைவப்பிரகாசவித்தியாசாலைகளில், வழமைபோற் சிறப்புறநடைபெற்றது. அன்று ஸ்ரீமந். சிற்சபேசருக்கு விசேஷ அபிஷேகஆராதனைகளும் நடைபெற்றன. அநேக ஏழைகள் அன்னதானஞ்செய்யப்பெற்றனர்.

பரிசளிப்பு:—நீர்வேலிச் சைவப்பிரகாச வித்தியாசாலையிலே இத்தமீ 15௳ சனிக்கிழமை சாயுங்காலம் ஆறுமணியளவில் பரிசளிப்புக்கொண்டாட்டம்நடைபெறும்.

கீழ்வகுப்புச் சிவில்சேவிஸ் பரீக்ஷை:—இலங்கை அரசியல் கீழ்வகுப்புச் சிவில்சேவிஸ் உத்தியோகஸ்தர்களாகச் சேர விரும்புவோர்க்கு வருகிற மார்ஜமீ 25௳ சட்டநிருபணசபை மண்டபத்திலே ஓர்பரீட்சை நடத்தப்படும்.

கத்தியாற் குத்திக் காயப்படுத்தியது:—வண்ணாபண்ணைச் சாராயத்தவரணைக்கணித்தாய்க் காங்கேசன்துறைறோட்டில் சென்ற வெள்ளிக்கிழமை கொக்குவிலிலுள்ள இருவாலிபர்க்கிடையில் நிகழ்ந்த சண்டையில் ஒருவர் மற்றவரைக் கத்தியாற்குத்திக் காயப்படுத்தினர். பொலிசார் அவ்வாலிபர் இருவரையும் பிடித்து அடைத்திருக்கின்றனர்.

களவு:—தலையாளியிலே பொன்னுரத்தின மென்பவரின் வீட்டில் சென்ற செவ்வாய்க்கிழமையிரவு யாரோ கள்வர் புகுந்து அங்கிருந்த நகைகள் புடைவைகள் முதலியனவற்றையும் அலுமாரியிலிருந்த 300 ரூபாவையும் களவாடிச் சென்றுவிட்டனர். பணம் உட்படக் களவுபோன பொருட்களின் விலை 1600 ரூபாவரையிலிருக்குமாம்.

புதியவரிகள்—கொழும்பிலே சென்ற திங்கட்கிழமை இலங்கைச் சுதேச சங்கத்தாரின் National League Association கூட்டமொன்று மெஸ். ஜேம்ஸ் பீரிஸ் அவர்களின் அக்கிராசனாதிபத்தியத்தின்கீழ் கூடிற்று. இக்கூட்டத்தில ரப்பரின் ஏற்றுமதித்தீர்வையை நீக்கி அதற்குப் பதிலாக வேறு கஷ்டமான வரிகளை ஏற்படுத்துவது சரியன்றெனப் பலர் தக்க நியாயங்கள் காட்டிப் பேசினர்.

காங்கேசன்துறை முத்துமாரி அம்மன் கோயில்:—இக்கோயில் இறைக்குச் சிலவருடங்களின்முன் காங்கேசன்துறை ச. ஆறுமுகம் என்பவராற் பலர் பொருளுதவிகொண்டு திருப்பணியாகி கும்பாபிஷேகஞ் செய்யப்பெற்று பிரமஸ்ரீ. செ. நடராஜையரவர்கள் அருச்சகராக நியமிக்கப்பெற்றுக் கிரமமாக நடைபெறுகின்றது. இவ்வாலயம் வரவர அதிக மூர்த்திகரமும் அருளுமுள்ளதாய் விளங்கிவருகினறமையால், மேற்படி ஆலய மானேசரும் அதைச்சேர்ந்த மற்று முன்னோரும் அதிசிரத்தையெடுத்து இவ்வாலயத்தைச் செவ்வனே நடாத்தி அவ்வம்பாளின் திருவருளைப் பெற்றுய்வாராக.

கடித.

இங்கிலாந்துக்குச் சென்ற இந்திய பத்திரிகாசிரியர்கள்:—இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்குச சென்ற இந்தியபத்திரிகாசிரியர்கள் பிரான்ஸில் யுத்தம் நடந்த இடங்களை விசேஷமாய் இந்திய இராணுவம் நின்று பொருத இடங்களாகிய உவைப்ரெஸ்கினிவெஞ்சி என்னுமிடங்களைத்தரிசித்துலண்டனுக்குத்திரும்பினர். இவர்கள் உவின்சர்மாளிகை, உலூவிச, கமயசாலை, ஒகஸ்வோர்ட், முதலிவிடங்களைத்தரிசிப்பதுடன் மெஸ்.மெண்ரேகுஅவர்களால் இந்தியா ஆபீசில் ஏற்று உபசரிக்கவும்பெறுவர்.

சடுதி மரணம்:—யாழ்ப்பாணம் பொலிஸ் சப் பெறின்றன் ஆபீசத்தலைமைக்கிளாக்காகவிருந்த மெஸ் ஜோன்மாட்டின் என்பவர் சென்ற சனிவாரத்தன்று வேலைபார்த்துக்கொண்டிருந்தபோது சடுதியில் ஏதோ நோய்வாய்ப்பட்டிறந்துவிட்டனர்.

தேகவியோகம்:—வண்ணார்பண்ணை பிமரஸ்ரீ இ. செல்லக்குருக்களவர்களின் சகோதரன் பிரமஸ்ரீ இ சுப்பிரமணியக் குருக்களவர்களின் ஏகபுத்திரனும், வித்தியாதரிசி பிரமஸ்ரீ சதாசிவ ஐயரவர்களின் சகோதரனுமாகிய ஸ்ரீ.இரத்தினசபாபதி ஐயா ஐப்பசிமீ கஎ௳ தேகவியோகமாகிவிட்டனர். இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில ஆங்கிலம் கற்றுவந்தவர். இறக்கும்போது வயது ௧அ. இங்கு பரவிவந்த நவீன சுரமே இவரது மரணத்துக்குக் காரணம். இவரையிழந்து துன்புறும் இவரது பிதாவோடும் ஏனைய சுற்றமித்திரருடனும் நாமுமனுதாபப் படுகின்றோம்.

இலங்கைச் சீர் திருத்தம்:—ராஜாங்க சீர் திருத்தத்திற்காக இலங்கையிலிருந்து அனுப்பப்பட்ட கோரிக்கை விஷயமாய் காமன்ஸ்சபையில் மிஸ்டர் ரும்சேமக்டானல்ட் கேட்ட கேள்விக்குப் பதிலாக, தேசாதிபதி அவர்கள் இப்போதுதான உத்தியோகத்தில் பிரவேசித்திருக்கிறபடியால் அதைப்பற்றி தேசாதிபதியவர்களின் றிப்போட்டு வரும்பரியந்தம் ஒரு முடிவான தீர்மானமுஞ் சொல்வது கூடியதல்லவென்று மிஸ்டர் ஹிவர்ன்ஸ் கூறினர்.

ஐ. வி.

கொழும்பில் ஓர் பெரு நெருப்பு:—கொம்பனித்தெருவில் மெஸர்ஸ் ஹரிசன் கிராஸ்பீல்டு கம்பனிக்குச் சொந்தமான விக்டோரியா இயந்திரசாலையில் சனிக்கிழமை காலையில் ஓர் பெரு நெருப்புப் பற்றிக்கொண்டதினால் அதிக சேதம் விளைந்தது. நெருப்பு அன்று காலை 4 மணிக்கு பச்சைத் தேயிலை செய்யும் யந்திரசாலையில் மத்தியில் ஆரம்பித்தது. அப்பொழுது ஈயயந்திரசாலையில் வேலைசெய்துகொண்டிருந்த சிலவேலையாட்களாலும் இயந்திரம் ஓட்டுபவராலும் கண்டுபிடிக்கப்பட்டது. கொஞ்சநேரத்திற்குள் தீ பலமாய்ப் பற்றிக்கொள்ள நெருப்பணைக்கும் யந்திரம் முதலியன உடனே வந்து உதவிபுரிய இரண்டுமணிநேரத்திற்குள் ஒருவாறு நெருப்பு அவிந்தது. சேதம் மதிகமாயிருக்குமென கருதப்படுகின்றது. ஜ-மி.

சென்னையிற் பெரும் புயல்:—இங்கு நிகழ்ந்த அத்தினத்திலேயே சென்னையிலும் பெரு மழை பெய்து பெரும்புயல் வீசியதால் பல மரங்கள் வீடுகளிலும் தந்திக்கம்பிகளிலும் வீழ்ந்து அதிக சேதமுண்டாயது. எத்தனையோ சுவர்கள் அயலிலுள்ள பொருட்களையும் சேதப்படுத்திக்கொண்டு வீழ்ந்தன. காற்றின் கடுமையினால் வீடுகள் மீதுள்ள ஓடுகளும் எடுத்து வீசப்பட்டன. பொருட் சேதமதிகமன்றி உயிர்ச்சேத மொன்றுமில்லையென வறிகின்றேம்,

## தந்திச் சமாச்சாரம்.

### (யுத்தசங்கதிகள்.)

## ஜெர்மனியின் இன்னொருவேண்டுகோள்

### யுத்தநிபந்தனைகள் தணிவுசெய்யப்படவேண்டும்.

நவம்பர்மீ 19உ.

ஜர்மன் கவர்ண்மெண்டார் நேசக்கட்சியாருக்கும அமெரிக்காவுக்கும் ஒரு அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். அதில் அவர்கள் யுத்த ஓய்வு நிபந்தனைகளானவை றையின் நதியின் இடது கரைக்கும் அதன் வலதுகரைக்குமுள்ள பொருளாதாரநிலைக்குப் பலத்த மோசத்தைக் கொடுக்கிறதென்றும், அந்த நிபந்தனைகள் தணிவுசெய்யப்படாவிடின், அப்பகுதியிலுள்ள ஜனங்களின் ஜீவனும்சம கூடியதலலவென்றும் போல்ஷவிக்கிய மீறுதல் நடபடிகள் உண்டாக்கக்கூடியதென்றும் அவர்கள் காட்டி அதை நிவர்த்தி செய்வதற்காக பின்வரும் காரியங்களைக் கேட்டிருக்கின்றனர்.

1. றையின் நதியின் இடதுபகுதியில் கிரமமான சம்சர்க்கம் இருக்கப்படவேண்டும். இராணுவமுறையாய் கைவசப்படுத்தப் படும்போது முதலாய் இடது பகுதிக்கும் மற்றும் மீதியான ஜெர்மனிய நாடுகளுக்கும் பிறதேச நாடுகளுக்கும் முற்றும் கிரமமான பொருளாதார சம்பந்தம் இருக்கவேண்டும்.

2. தேசத்தின்பழைய எல்லைக்குள் றைன் நதியின் இடது கரைப்பகுதியிலுள்ள சுரங்கங்களிலிருந்து நிலக்கரியையும் மர உப்பு டாஷ் போட் முதலானவைகளை ஜெர்மானிய சொந்தக்காரர் முன்போலவே எடுத்து றைன் நதிக்கு அப்பால் வலது கரையின் பகுதிகளுக்குக் கொண்டு போக அனுமதம் வேண்டியது.

3. ஜெர்மன் தேசப் பழைய எல்லைக்குள் ஏற்றுமதிகள் நடக்கும் பொருட்டு றைன் நதியை பொதுப்பட தாராளமாய் உபயோகிக்க இடம் கிடைக்க வேண்டும்.

4. வடகடல் பால்டிக் கடல் கரை மார்க்கமாக நிலக்கரி மர உப்பு, ஆகாரம் என்பவை ஜெர்மனிக்குக் கொண்டு வரும்படியாக ருட்டர்டாம் மார்க்கமாகவும் கரை மார்க்கமாகவும் தாராளமாய் கப்பல் நடவடிக்கை நடத்துவதற்கு அனுமதம் கிடைக்கப் படவேண்டும.

5. ஜெர்மனியின் மீதிப்பாகத்துக்கு உபயோகமாக றைன் நதியின இடதுபாகத்தில் கைத்தொழில் தொடர்பாய் நடப்பதற்கு இடம் கிடைக்க வேண்டும்.

6. கைவசப்படுத்தப்பட்ட பகுதியில் தாராளமாய் றெயில்வே போக்குவரவு சம்பந்தம இருக்கப் படவேண்டும்.

7. றைனின் இடது கரைப்பகுதியிலிருந்து வலது கரைப்பகுதிக்கு மின்சார சக்தி கொடுக்கப் படவேண்டும.

8. இடது பாகத்தில் இராணுவ சேவைக்குத் தகுதியுள்ள தள்ளப்பட்டவர்களான மனிதரை இராணுவ உடையோடு இருந்தாலும் கைது செய்யக் கூடாது.

9. றைன் நதியின் இடது கரையிலுள்ள எல்லாப் பட்டண ஸ்தாபனங்களும், இராணுவ ஸ்தாபனங்களும் தொடர்பாய் வேலை நடக்க இடங்கொடுக்கப்படவேண்டும்.

10 கைவசப்படுத்தப்பட்ட நாடுகளில் சைனியரின் அவசியத்திற்காயல்லாமல் கட்டாயமாய் யாதொன்றும் கேட்கப்படக்கூடாது.

11. கைவசப்படுத்தப்பட்ட நாடுகளுக்கும் றைன் நதியின் வலது கரைப்பகுதிக்கும் மற்றும் நடுவுநிலைமை தேசத்துக்குமிடையில் டெல்லிபோன்தந்தி, தபால் போக்கு வரவு நடபடிகள் தாராளமாய் நடத்துவதற்கு இடங்கொடுக்கப்படவேண்டும்.

12. றைன் நதியின் இடது கரைப்பகுதியிலிருந்து வலது கரைப்பகுதிக்கு ஆகாரமும் விருத்திசரக்குளும கொண்டு வருகிறதற்கு இடம் கிடைக்கவேண்டும்.

13. தேசத்தின் பழைய எல்லையும் அத்துடன் லக்ஸன்பர்க் நாட்டின் எல்லையும் திர்வை எல்லைகளாக எண்ணப்பட வேண்டும் அவைகள் தேசத்திற்காக ஜர்மன் உத்தியோகஸ்தர்களால் வசூல் செய்யப்படவேண்டியது. ஏற்றுமதி இறக்குமதி விஷயமான விலக்குகள் ஜர்மன் உத்தியோகஸ்தராலே ஏற்படுத்தப்படவேண்டும்.

5000 றெயில்வே இஞ்ஜின்களையும் 150000 வண்டிகளையும் ஒப்படைப்பதால் பட்டணங்களுக்கு ஒருகிழமைக்குத்தானும் ஆகாரங்கள் அளிப்பதற்குக் கூடாததாயிருக்கு மானபடியால் தேச முழுவதும் பசிபட்டினியாகிவிடுமென்று அவ்வறிக்கை வற்புறுத்திக்கூறுகின்றது.

14. கடைசியாக வழியடைப்பின் நிலைவரத்தால் விசேஷமாய் கிழக்குப்பாகத்தில் ஜர்மன் தொழில்களின் எத்தனுக்காய் வடக்கேயிருந்து வரும் ஏற்றுமதிவகைகளுக்குக் கூடாததாகிறதென்றும் ஸ்காண்டிநேவியா நாட்டுக்கு அனுப்பப்படும் நிலக்கரிக்கு தடையுண்டாகி அதனால் இருபாகத்தாருக்குமுள்ள தொழில்கள் நிறுத்தப்படுமென்றும் இன்னும் வடகடல் பால்டிக்கடலில் மீன்பிடித்தொழில் நசித்துப்போமென்றும் காட்டப்பட்டிருக்கின்றது. ஸ்பாயிலுள்ள ஜெர்மன் பிரதிநிதிகள் இந்த அவசியமான விருப்பங்களை நேசகட்சியாரின் பிரதிநிதிகளோடு ஆலோசனை செய்வதற்காக கட்டளை கொடுக்கப்பட்டது. ஆனால் நேசக்கட்சியாரின் பிரதிநிதிகளுக்கு முழு அதிகாரமும் கொடுக்கப்படாமையால் அவைகள் பலிதமுறவில்லை.

ஜனமித்திரன்.

## பிரதோஷ விரதம்:

(17-ம் இலக்கப் பத்திரிகைத் தொடர்.)

உஜ்ஜினிநகரத்தின்கண்ணே நற்குண நற்செய்கைகளுடனே புகழையே ஆபரணமாக உடையவனும், இந்திரனுக்கு ஒப்பாகிய செல்வத்தையுடையவனும், சந்திரசேனன் என்னும் பெயரையுடையவனுமாகிய அரசன் ஒருவன் இருந்தான். அவ்வரசன் அந்நகரத்திலே மாகாளேசுரரென்னுந் திருநாமத்தையும் உமாதேவியை வாமபாகத்திலுடையவருமாகிய சிவபெருமானை மனசிலே நினைத்துத் தியானஞ்செய்து பிரதோஷகாலத்திலே அப்பெருமானுடைய திருவடிகளுக்குப் பூசைசெய்தான்.

அப்பொழுது சிவாஞ்ஞையினாலே திருக்கைலாசத்திலிருக்கின்ற மணிபத்திரன் என்னுங் கணநாதன் அங்கே வந்து, சந்திரசேனமகாராசனைப் பார்த்து, "அரசனே! எங்கள் பிதாவாகிய சிவபெருமானுடைய பிரதோஷ பூசையிலே ஒப்பிலாப் பக்தியையுடையவனாகிய உன்னோடு சிநேகமாயிருக்க விரும்பினேன்' என்று தான் வந்த சமாசாரத்தைச் சொல்ல, அதுகேட்ட அவ்வரசன் அக்கணநாதனோடு சிநேகிதனானான். இந்தப்பிரகாரம் இருவரும் நட்புடையராய் வாழுநாளில், மணிபத்திரன் சந்திரசேனமகாராசனுடைய அன்புக்கு மனமகிழ்ந்து, சூரியனுக்கு ஒப்பாகிய ஒளிபொருந்திய "சிந்தாமணி" என்னும் பெறுதற்கரிய ஒருரத்தினத்தை "இது உன்னுடையதா யிருக்க' என்று கூறிக் கொடுத்தான். அச்சிந்தாமணியென்னும் ரத்தினத்தின் செழுமையை அளவுபடுத்திச் சொல்லமுடியாது. அதை மனதினாற் தியானித்தாலும் செல்வத்தைக் கொடுக்கும். விட்டுணுமூர்த்தி அணிந்திருக்கும் கௌஸ்துப மணியும ஒளிகெடும்படி மிக்க ஒளியைக்கான்று அனந்தகோடி சூரியரைப் போலக் கிரகணங்களை யுடையது.

அந்தச் சிந்தாமணியைத் துணைப்படுத்திச் சந்திரசேனமகாராசன் தன்மார்பில் ஆபரணமாகத் தரித்துக்கொண்டான். அது மிக்க ஒளியோடு பிரகாசித்தது. அக்காலத்து, அச்சிந்தாமணியின் பெருமையை பலதேச அரசர்களும் கேள்விப்பட்டு அச்சிந்தாமணியைத் தாங்கள்பெற்று அணிதல் வேண்டுமென்று விரும்பி, அவர்களெல்லாம் தனித்தனி தூதர் மூலமாகச் சொல்லி யனுப்பினார்கள். சில அரசர் சிநேகமுறையாகக் கேட்டனுப்பினார்கள், சிலஅரசர் போர்செய்து வென்று சிந்தாமணியைக் கவருவோமென்று சொல்லி அனுப்பினார்கள். அவைகளை அறிந்த சந்திரசேனமகாராசன் அந்தத் தூதுவர்களிடத்தே அவ்வரசர்களுக்கெல்லாம்,'என்னுடை புயபலமும், நான் பெற்ற வரங்களும் நீங்கியபின்பு என்னிடத்திலுள்ள சிந்தாமணியைத் தருகிறேன்' என்று அத்தூதுவர்களிடம் சொல்லியனுப்பித் தன்மனதிற் கோபங்கொண்டவனாயிருந்தான்.

சந்திரசேனமகாராசன் சொல்லியனுப்பிய வார்த்தைகளைக் கேட்ட அரசர்களெல்லாம் பகைகொண்டு கோபம் பொருந்திய மனத்தினராய்த் தங்கள் நால்வகைச் சேனைகளோடு உஜ்ஜினிப் பட்டணத்தை அடைந்து முற்றிக்கையிட்டார்கள். அப்பொழுது சந்திரசேனமகாராசன் அதனையறிந்து திடசித்தனாய் அஞ்சாமலும், வேறொருவகைகள் செய்ய எண்ணாமலும், அன்றலர்ந்த புட்பங்களையும், ஆபரணங்களையும், தூப தீபம், திருவமுது திருமஞ்சன முதலிய பூசைக்குரிய உபகரணங்களையும கொண்டு, மாகாளம் என்னும் பெயர்பொருந்திய ஆலயத்தில் வீற்றிருக்கின்ற சுயம்புமூர்த்தியாகியசிவலிங்கப்பெருமானை அரிச்சித்து, திருவடிகளில் மனம் லயிக்கும்படியான நிஷ்டையிலிருந்து, இருதயத்திற் பொருந்திய மோகாதிகளைக் கடிந்து புறம்போக்கி, வேதங்களிலும் ஆகமங்களிலுஞ் சொல்லப்பட்ட மந்திரங்களையெல்லாம் குறைவுபடாமற் சொல்லித் தோத்திரஞ்செய்து, தனது குரு உபதேசித்த கிரமப்படி பூசித்து மாகாளேசுரனுடைய திருவடிகளைத் தியானித்தான்.

சந்திரசேன மகாராசன் இந்தப்பிரகாரம் பூசைசெய்துகொண்டிருக்கும்பொழுது, ஆயர் குலத்திற்பிறந்த ஒரு பெண் தன்புத்திரனுடன் அந்த ஆலயத்திற்போய், மாகாளேசுவரன் திருவடிகளை வணங்கித், திரும்பிவந்தாள். மற்றைநாள் அவள் புத்திரன், சந்திரசேனமகாராசன மாகாளேசுவரனை மனதிற்றியானித்து முதலான் வணங்கிய தன்மையைத் தன்மனதிலே நினைத்து, நல்ல புட்பங்களைக்கொண்டு முறையாகப் பூசை செய்பவனாய், பூசைத்திரவியங்கள் எல்லாம் தனக்கு அகப்படாமையால் பச்சிலைகளையும் மணலையுங்கொண்டு இவைகள் வாசனைபொருந்திய பூமாலைகளென்றும், இவைகள் தீபங்கள் என்றும், இவைகள் திருமஞ்சனமென்றும், இவைகள் நல்ல திருவமுதுஎன்றும், இவைகள் பொன்னாலாகிய திருவாபரணங்கள் என்றும், இவைகள் வஸ்திரங்களென்றும் எற்பாடு செய்துகொண்டு, பூசைசெய்து சிவத்தியானஞ்செய்துகொண்டிருந்தான். ஐம்புலன்களின் வழிச்செல்லுகின்ற மனதைப் பரிகரித்து, நம்பிக்கையோடு சிவத்தியானத்திலிருக்குமிடத்திலே தாயானவள்போய் அவனுடைய பசியைக்குறித்து, "மகனே! போசனஞ்செய்யவீட்டுக்கு வருவா"யென்று அழைத்தாள். அவன் எழுந்திராமல் சிவபெருமானுடைய திருவடிகளை இருதயத்திலே அன்புபொருந்த வைத்துக்கொண்டிருந்தான். தாய் தன்மகனிருக்குந்தன்மைகளை அறியாமல், இந்த விளையாட்டொன்று உண்டாக, போசனஞ்செய்வதைமறந்திருத்தல் என்னகாரணமோ என்று இவ்வாறு சொல்லிக் கோபித்து, மகனைக் கையினாலே அடித்தாள். அதுவுமன்றி, சிவபூசையில் மிகுந்த உறுதிப்பாட்டை உடையவனாகி அவன் சிவலிங்கப் பெருமானாகப் பாவித்து வைத்துப் பூசித்த ஒளியையுடைய சிலையை எடுத்துத் தூரத்திலே எறிந்துவிட்டுக் கோபத்தோடு வீட்டுக்குச் சென்றாள். அப்புத்திரன் தான்வைத்துப் பூசித்த லிங்கத்தைத் தன் தாய் எடுத்து எறிந்துவிட்டுப் போனதைப் பார்த்து, 'என் இறைவனாகிய சிவலிங்கப் பெருமானை இவ்விடத்திலிருந்து எடுத்து எறிந்துவிட்டாள் என்று தன்மனம்மிகவருந்த முறையிட்டழுது தனக்குச் சம்பவித்த துன்பத்தைச் சகிக்கமாட்டாமல் இரண்டு நாழிகை வரையில் மூர்ச்சையடைந்தான், பின்பு மூர்ச்சைதெளிந்து கண்களை விழித்துப் பார்த்தான். அப்பொழுது பழையதான தன்னுடைய வீடுமுழுவதும் இந்திரனுடைய ஒளிமிக்க இரத்தினத்தினால் அழுத்திச் செய்யப்பட்ட கோவில்போல விளங்குவதைக் கண்டான். தன்தாய் எடுத்து எறிந்துவிட்ட சிவலிங்கமானது, திவ்வியமானதாய் ஒளியுள்ள ரத்தினத்தைப்போலச் சோதியுள்ளதாய் அழியாத நிலையுடனே இருப்பதைக் கண்டு மனமகிழ்ந்து அதிசயவயத்தனாயினன். (வரும்.)

S. V. R. M.

## கடிதம்.

### சிவபரத்துவம்

"சைவத்தின் மேற்சமயம் வேறிலை அதிற்சார் சிவமாந் தெய்வத்தின் மேற் தெய்வமில்லெனு நான்மறை" எனவும், "சைவசமயமே சமயஞ்சமயாதீதப் பழம்பொருளைக் கைவந்திடவே மன்றுள் வெளிகாட்டும்" எனவும் வரும் ஆப்தவாக்கியங்களைக் கொண்டு, ஆராயவேண்டிய சொற்கள், "சைவம்" "சிவம்" என்னுமிரண்டு பதங்களேயாம். சைவமாவது வேதசிவாகமங்களின் முடிந்தமுடிவாயுள்ள சமயமாகும். இதுவே அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என்னுஞ் சமயபேதங்களனைத்தையும், தன்கீழ்ப்படுத்தித் தான் சிரத்தானமாய் வீற்றிருப்பது. இதன்வழிபாடு ஞானமார்க்கமொன்றேயாம். மற்றுஞ் சரியை, கிரியை, யோகம் என்னும் மூன்று வழிபாடுகளும், ஞானவழிபாட்டுக்கு அங்கமாயுள்ளன. அச்சரியையாதி மூன்றும, சிவமானது ஆன்மாக்களின் பொருட்டுக் கொண்டருளுந் "தடத்த வடிவங்களை" வழிபடும் மார்க்கங்களாம். ஞான வழிபாடோமெய்ப் பொருளாகிய "சுத்த சிவத்தையே" நேரேவழிபடும் மார்க்கமாம். இதனால் வைதிகசைவமென்னும சித்தாந்த சைவமே ஏனைய சமயங்களனைத்திற்கும், இராசாங்கத்தில் வீற்றிருப்பதும், அதில் கூறப்படும் தெய்வம், "சிவம்" என்பதுந் தானே போதரும். அந்தச் சுத்த சிவமானது முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளாயுள்ளது. அது ஆன்மாக்களை யீடேற்ற வேண்டுமென்னும் பெருங்கருணையினால், பஞ்ச கிருத்தியங்களையுஞ் செய்யும அவதாரத்து, பதி யென்று சொல்லப் படுகின்றது. அக்கிருத்தியமும் சுத்த மாயையில் மாத்திரம் நிகழும். அதற்கு வேறாக அசுத்த மாயையில், "அநந்தேசுரரால்" பஞ்ச கிருத்தியம் நடைபெறும. அதற்கும் வேறாகப் பிரகிருதிமாயையில், 'ஸ்ரீகண்டருத்திரரால்'பஞ்ச கிருத்தியம் நடக்கும். இக்கிருத்திய நிகழ்ச்சியில் பதியின் சத்தி அநந்தேசுரரை அதிஷ்டிக்க, அநந்தேசுரர் ஸ்ரீகண்ட ருத்திரரை யதிஷ்டிக்க, அவர் பிரமவிஷ்ணுக்களை யதிஷ்டிக்க, இவ்வாறு பதியினது சக்தியின் அதிஷ்டானவாயிலாகவே யாவும் நடைபெறுமென்றுணர்க. இத்தகைய உண்மையினை யறியாத "பாஞ்சராத்திரிகள்" முதலிய புறச் சமயிகள் சித்தாந்த சைவத்தைக் கண்டனஞ் செய்கிறோமென்று படாடோபத்தோடும் புறப்பட்டுப் புராணங்களிலே, உருத்திர மூர்த்தியின் பேராற் கூறப்பட்டுள்ள சிலகதைகளை யெடுத்துக் கொண்டு, அவற்றின் தத்வார்த்தங்களையும் உணராது, கண்மூடித்தனமாக, மனஞ்சென்ற வரையில் காதிதங்கொண்டமட்டும்,ஆக்ஷேபங்களைத் தொடுத்துச் சித்தாந்த சைவத்தைக் கண்டித்துவிட்டோமென்று மனப் பால் குடித்து மகிழ்ச்சியடைகின்றார்கள். இவர்களுடையவெள்ளறிவைக் கண்டு சித்தாந்த சாத்திரங்களை ஐயந் திரிபறத் தெளிந்த மேலோர் விசனிக்கின்றார்கள். கிருத்தியகர்த்தர்களாகிய பிரமா, விஷ்ணு, உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளுடைய கதைகளே புராணங்களிற் கூறப்பட்டிருக்கின்றன. இவைகளையெடுத்து விரித்துப் பாமரசனங்கள் மயங்கும் வண்ணம் சம்மார கர்த்தாவாகிய ருத்திரமூர்த்தியைக் கண்டித்து விடுவதினால், வைதிகசைவங் கண்டிக்கப் பட்டுப்போயிற்றென எண்ணுவது மிக்க மௌட்டிகமாகும். இவர்கள் நினைத்தபடி வைதிகசைவம உருத்திரமூர்த்தியிலாவது, அவருடைய சரித்திரங்களைக் கூறும் புராணக் கதைகளிலாவது தங்கியிருக்கவில்லை. புராணங்களிலே பிரம விஷ்ணு உருத்திரர்களைப் பரம்பொருள் என்று கூறியது, உபசாரமேயன்றி உண்மையன்று. உருத்திருடைய பகுப்பைப்பற்றி விசாரிக்குமிடத்து 'ஏகாதசருத்திரர்' 'காலாக்கினிருத்திரர்' 'அஷ்டகேசருத்திரர்' வடகீழ்த்திசைக் கதிபராகிய 'ஈசானருத்திரர்' முப்பத்து முக்கோடி தேவகுப்பிற் சேர்ந்த 'பதினொருகோடி ருத்திரர்' சிவசாருப்பிய நிலைபெற்ற 'சிவன் முத்தர்கள்' முதலிய யாவரும் சிவபெருமானுடைய அருள்வடிவாகிய, மான் மழு சதுர்ப்புசம் காளகண்ட திரிநேத்திரங்களைப் பெற்ற உருத்திர வடிவத்தைப் பெற்றவர்களே. இவர்களிலொருவர் தவறிழைக்கின் அது பரசிவத்தைச் சாருமென்று எந்த நிரட்சர குட்சியு மொத்துக் கொள்ளுவாரு? அரசனேயன்றி அரசனுடைய முத்திரை முதலிய ஆணையைத் தாங்கி, உலகத்தைக் காக்கும் மந்திரி பிரதானி முதலாயினோரும் அரசமரியாதையைப் பெறுதற்கு உரியராயிருத்தல்போல, முழுமுதற்பொருளாகிய சிவம் மாத்திரமன்றி அச்சிவத்தின் சத்தியினால் நடத்தப்படும் முத்தொழிற்குரிய கர்த்தர்களும், அச்சத்தியின் காரணமாக வணங்கப்படுதற்குரியரேயாவர். புராணகர்த்தர்களாகிய பிரமா, விஷ்ணு, உருத்திரன் முதலியவர்களைப்பற்றி விசாரிக்குமிடத்து, பிரமாவைப் பரம்பொருளென்று வைதிகசைவம் ஒருபோதும் ஒத்துக்கொள்ளவில்லை. அவர் ஆன்மவர்க்கத்துட்பட்டவர்; அவரது தொழில் சிருட்டி. அத்தொழிலும், பிரமபதமும் அவரியற்றிய சிவபுண்ணியத்தினால் கிடைத்தன. அப்புண்ணியம் அனுபவித்து ஒழிந்த காலத்து, அப்பிரமபதமும் அவருக்கு அகன்றுபோம். மனிதருடைய கால அளவில் இரண்டாயிரஞ் சதுர்யுகங் கொண்டது, பிரமாவுக்கு ஒரு நாளாகும். இப்படி முன்னூற்றறுபதுதைக்கொண்ட நாள் ஒரு வருடமாம். இவ்வாறு நூறுவருடஞ் சென்றால் பிரமா தனது ஆயுள் முடிந்து இறந்துவிடுவர். பின்னர் அப்பதத்துக்குரிய புண்ணியமுடைய வேறொரு ஆத்துமா பிரமாவாய்வருவர். இனி, விஷ்ணுவும் ஆன்மவர்க்கத்துட்பட்டவரே; அவர் பதம் வைகுண்டம். அவர் தொழில் காத்தல். ஒரு விஷ்ணுவுடைய ஆயுளுள்ளே அநேகம் பிரமாக்கள் தோன்றி யழிவார்கள். அவர் பிரமாவை விடமிகவும் மேம்பட்டவர். அவர் அதிகாரததாலும், ஸ்ரீகண்டருத்திரருக்குத்தேவியாயிருக்குமுரிமையாலும், வைதிகசைவர் யாவராலும் வணங்குதற்குரியராயுள்ளார். இனிச் சம்மார கர்த்தாவாகிய ஸ்ரீகண்டருத்திரர் ஆன்மவர்க்கத்துட்படிக்கப் பட்டிருப்பினும், பிரளயாகலரிற் பசுகுணமுடையவராய், பந்தம் நீங்கி முத்திபெற்றவ ராதலால் பசுவர்க்கத்துள் வைத்து எண்ணப்படுபவரல்லர். வேதாகமங்களிலே யொவ்வோரிடங்களில், இவரைப் பிரமவிஷ்ணுக்களோடு சேர்த்துப் பசுவாகக் கூறியது முன்னிருந்த இருப்பை நோக்கியன்றி வேறல்ல. இவர் பாசம் நீக்கி, சம்மாரத் தொழில் செய்யுமதிகாரம் பெற்று, சிவசத்தியால் அதிட்டிக்கப் பெற்றவராய், திரிமூர்த்திகளுக்கும் மேலாகிய சிவபெருமானுக்குரிய எல்லாப் பெயரும், வடிவுந் தொழிலும்பெற்று, சைவாகமங்களை அறிவுறுத்துங் குரவராய், அயன்மா லிருவர்க்கும் மேலவராய், சைவசமயத்தை யடைந்து சமய தீக்ஷை பெற்றோரால் வழிபடுங் கடவுளாயினர். ஆதலால் இவரைப் பதிவர்க்கத்துள் வைத்து எண்ணுதல் சைவசமயக் கொள்கையாம். இவர் இவ்வாறு சகத்துக்குக் கர்த்தாவா யிருப்பினும், இவரை நடத்துவது சிவசத்தியாதலால், எலலா முதன்மையும் சத்திமானாகிய சிவபெருமானுக்கே யுரியதென்றுணரவேண்டும். இத்தகைய வுண்மையெல்லாம் பதிநூலாகிய" சிவஞானபோதம்" முதலிய மெய்கண்டசாத்திரங்களில ஆழ்ந்த உணர்ச்சியுடைய அறிஞர்களுக்கே விளங்குமன்றி ஏனையோர்க்குஎட்டுணையும்புலப்படமாட்டாவாம. மும்மூர்த்திகளுக்கும் மேலாயுள்ளவர் சிவபெருமானென்பதற்கு, "தேவர்கோ வறியாத் தேவதேவன் செழும் பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை, மூவர்கோ னாய்நின்ற முதல்வன்" என்று ஸ்ரீமந்.மாணிக்கவாசக சுவாமிகளும், "மூவர்க்கு முன்னவன்காண்' என்று திருநாவுக்கரசுநாயனாரும், "மூவருமடிதொழுமிறை'என்று திருஞான சம்பந்தமூர்த்திநாயனாரும், "மூவரும் பரசமெய்தை' என்றுசுந்தரமூர்த்திநாயனாரும்; "எதருனை வித்தகனை மூவரிலொ ருத்தரென; வோதியிடு மற்பமதியீர் என்று சைவ எல்லப்ப நாவலரும், இன்னும் சிவசத்தியாகும் மும்மூர்த்திகளுக்கு மேற்பட்டவர் என்பதற்கு, "முதன் மூவருக்கு மன்னே" என்று அபிராமிப்பட்டருங் கூறியருளிய அருள்வாக்குகளே சான்றாகும. இன்னும் முப்புராதியரைக் குறுநகையா லெரித்தமையாலும், தக்கனாலியற்றப்பட்ட பழிப்புக்குரிய வேள்வியை வீரபத்திரரை ஏவி யழித்தமையாலும், மார்க்கண்டர் பொருட்டு மறலியை யுதைத்தமையாலும், மன்மதனை நுதல்விழியா லட்டமையாலும, விளியையிடந்து அருச்சித்த விஷ்ணுமூர்த்திக்குச் சக்கரப்படையை யீந்தமையாலும, அரியயனிருவரும் அடிமுடி யறியாவண்ணம் அக்கினிப்பிழம்பாய் நின்றமையாலும், எண்ணிறந்த பிரமவிஷ்ணுக்களின் சிரமாலையை அணிந்தமையாலும், திரிலோகங்களையும் வென்று ஜபத் தம்பம் நாட்டிய இராவணேசுரனை, கால்விரல்நுதியால் ஊன்றி அடர்த்தமையாலும், பாற்சமுத்திரத்திலுதித்த ஆலகாலவிடத்தை யருந்தி மலர்க்கிளத்திக்கும், கலைக்கிளத்திக்கும் மங்கிலியப் பிச்சை யீந்தமையாலும், ஆதிவிஷ்ணுமூர்த்தி கொண்ட ஆமையின் ஓட்டையும், பன்றியின் கோட்டையும் பறித்தமையாலும, இரணியனை வதைத்த நரசிங்கத்தை எண்காற்பட்சி வடிவங்கொண்டு கிழித்தமையாலும், விசுவரூபங்கொண்டுநின்ற திருவிக்கிரமனுடைய முதுகெலும்பைப் பிடுங்கினமையாலும், ஆகாய கங்கையைப் பகீரதனுக்காகச் சடையிலேற்றுப் பார்மீது செல்லும்படி விட்டமையாலும் "மகாதேவன்" என்னும் திருநாமமுடைமையாலும், வைரவமூர்த்தி கிள்ளிய தன்னுடைய தலையைப் பிரமதேவர் இன்னும் படைக்கமுடியாதிருப்பதினாலும், விஷ்ணுமூர்த்தி தனதுபுத்திரர்களாகியபிரமாவுக்கும, மன்மதனுக்கும் சிவபிரானாற்கிடைத்த தண்டனையை விலக்கி இரட்சிக்க முடியாமல் பார்த்துக் கொண்டிருந்தமையாலும், தாமோதரன் இடபமாய்த் தாங்கினமையாலும், அருச்சுனனுடைய வில்லடியும், பாண்டியனுடைய பிரம்படியும் அகிலபுவனசராசரங்கள் அனைத்திற்கும்பட்டமையாலும், இன்னும் இவைபோன்ற பல ஏதுக்களாலும், சிவபெருமானே ஏனைய சமயக் கடவுளர் யாவரினும்மேம்பட்ட முழுமுதற்கடவுளென்று தெள்ளிதிற் றுணியப்படும். ஆதலால் அன்பர்களே, நமது சமய நூல்களாகிய சித்தாந்தசாத்திரங்களை நல்லாசிரியன்மாட்டு ஐயந்திரிபறக்கற்று நமது சமயத்தின் உண்மையை யுணருங்கள். வைஷ்ணவநூல்களாகிய பாரத ராமாயணம முதலிய நூல்களையும், மாயாவாத நூல்களையும (நவலஸ்) கட்டுக்கதைகளையுங் கற்று வீண்காலம் போக்காதிர்கள்.

இங்ஙனம்,
க. வைத்தியலிங்கபிள்ளை,
வண்ணைநகர்.

## என்பிதா பிரலாபிப்பானேன்!

கனவான்களே! சென்ற1916-ம்ஆண்டு எனது அன்பார்ந்த தந்தையார் என்னை ஆங்கிளம்கற்க சென்பத்திரிசியார் கல்லூரியிற் சேர்த்துவைத்தார். அங்கு படித்துவரும்நாளில் என்கைக்கெட்டிய சில கத்தோலிக்கமதப் புஸ்தகங்களை வாசிக்கலானேன்.

இப்புஸ்தகங்களை வாசித்துவரும் நாளில் என்னை அறியாமலே எனமனம் இப்புஸ்தகங்களிற் பதிந்துவிட்டது. இதையறிந்த என் பிதா காத்திராப்பிரகாரம்என்னிடம்வந்துஎனபடுக்கையின்கீழ் இப்புஸ்தகங்களுட் சிலவற்றைக்கண்டெடுத்துமன்றி என்னையும அதன்பேரில் அதிகம கண்டித்தார். அத்தோடுநில்லாமல் கல்லூரிஆசிரியர்களையும் எனக்கு இவ்விதமாகிய சமயகல்வி புகட்டக்கூடாதெனவும்பேசியது; உண்மைதான். Thomas ஆசிரியரவர்கள் சிலபுஸதகங்களைஎனக்குத்தந்தார். சிலகாலத்தின்பின் என் தந்தையார் என்னிலும் இவர்களிலும் நம்பிக்கை வையாது இவர்களுக்குக் கட்டவேண்டிய பணத்தைக் கட்டி என்னை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிற் சேர்த்துவிட்டு மன்னாருக்குப் போய்விட்டார். சிலநாளாயினபின் நான் மறுபடியும அவர்களிடம் போய்ச்சேர்ந்தேன். அவர்கள் என்னை அணைத்துக்கொண்டார்கள். அங்கு சேர்ந்த சில நாட்களின்பின் என் தந்தையார் மீண்டும் யாழ்ப்பாணம் வந்து என்னை வீட்டிற் காணுமையால் பல இடங்களிலும் தேடித்திரிந்து ஈற்றில் நான் இவர்களிடமிருப்பதாக அறிந்து என்னை வந்து பிடிக்க முயன்றார். நான்என்பிதாவுக்குப்பயந்து அவர்களிடம் மறைந்துகொண்டேன். அவர்கள் எனக்கு ஞானஸ்நானம் இட்டது உண்மைதான். ஞானஸ்நானம பெற்றபின் Father Recter என்னை என்னசெய்யப்போகின்றாய் என்று வினவினார். நான் படிக்கப்போகிறேனென்று கூறினேன். அப்படியாயின் இந்தக் கல்லூரிக்குப் போய் Leaving Certificate பெற்றுவரும்படியும் அவர்களுக்குக் கட்டவேண்டிய பணத்தைத் தாங்கள் தருவதாகவும் சொன்னார்கள். நான் என் Certificate தரும்படி கேட்டேன். அவர்கள் என் பிதாவின் உத்தரவின்றி தரமாட்டோமென மறுத்தனர். பின்பு பழையபடியே அவர்களிடஞ் சென்றேன். இப்படியிருக்கும் பொழுது என்பிதாஎன்னிடம்வந்து Certificate வாங்கித் தருவதாக என்னை வீட்டுக்குக் கூட்டிக்கொண்டுவந்தனர்.

கனவான்களே! வீட்டில்வந்து என் உறவு முறையாரையும் என் தந்தையின் மனதையும் பார்க்கும்போது என் மனம் பேதலித்துகிறது. என் தாய் என்னை ஈன்ற அக்காலத்தில் மரித்துவிட தாய்க்குத்தாயாகவும் தகப்பனாகவும் இதுவரை என்னை அன்பாய்வளர்த்த என்பிதாவின் மனதை சஞ்சலத்துக் குள்ளாக்குதல் சரியல்ல எனவறிந்து அவரது விருப்பத்தின்படி நடக்க உத்தேசித்துக்கொண்டேன். என்பிதாவுக்கு எவ்விதமனத்துன்பத்தையும் உண்டாக்காமல் நடந்துவருதலே மேலான தருமமென்று உணர்ந்து அவர் கட்டளைப்படி சுற்கச்சம்மதித்துக்கொண்டு இதைப்பத்திரிகை வாயிலாக வெளிப்படுத்தி உறுதிப்படுத்துகின்றேன். என் பிதாவே நீர்பிரலாபிக்கவேண்டியதில்லை. பிறரை நோவ வேண்டியதில்லை. என் சிறு வயதின்பேரில் செய்ததைப் பொறுத்துக் கொள்ளும்படி உம்மை மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். அன்றியும் நான் இனிமேல் என்சமய நூல்களைக் கற்று என் பிதாவின் பிரியத்தை நிறைவேற்ற எல்லாம்வல்ல ஈசன் அருள்புரிவாராக. என்பிதாவுக்குமாறாக எழுதிய பத்திரத்தை நான் இத்தால் விலக்கிக்கொள்வதோடு அவர்கள் எனக்கு இட்ட பெயரையும் நான் நீக்கிக்கொள்ளுகிறேன். சென்பத்திரிசியார் கல்லூரிக்குப் போகமாட்டேன்.

இங்ஙனம்,
வி. மு. துரைசிங்கம்.

## அரசியன்முறைத்திருத்தப் பெருங்கூட்டம்.

கொழும்பு கொம்பனித்தெரு
டீ சொயிசா கட்டிடம் 12-ம் இலக்கம்,
இலங்கை அரசியல் திருத்தச்சபையாரதும்,
இலங்கைக்குடிப்பெருஞ்சபையாரதும்
வேலைக்களம்
1918-ம் ஞு ஐப்பசிமீ 13-ந் தேதி.

ஐயா,

இலங்கை அரசியன்முறைத்திருத்தச்சபை (Ceylon Reform) யாரினதும், இலங்கைக்குடிப் பெருஞ்சபை (Ceylon National League Association) யாரினதும் வேண்டுகோளின்படி சென்ற டிசம்பர்மீ 15-ம் தேதி கொழும்புமாநகரில அரசியன்முறைத் திருத்தத்தினைப்பற்றி ஒரு பெருங்கூட்டங்கூடியதை நீங்களறிவீர்கள். அக்கூட்டத்திற்கு இந்நாட்டுப் பலபாகங்களிலுமுள்ள சபைகளில் தெரிவுசெய்யப்பட்ட பெருந்திருவாளர் நூற்றுநாற்பத்துநால்வர் வந்திருந்தனர். அச்சமயத்தில் மாட்சிமைமிகைறந்த நமதரசாகோமானது குடியேற்ற நாடுகளின் முதலமைச்சரவர்களுக்கு அரசியல் முறையிற் சில திருத்தங்கள் செய்துதரும்படியாக ஒரு விண்ணப்பம அமைத்து அனுப்பப்பட்டது. அவ்விண்ணப்பம் வந்து சேர்ந்ததாக அவர்கள் எங்களுக்கு அறிவித்திருக்கிறார்கள்.

2. இவ்விண்ணப்பத்தின்மேல் என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டனவென்று பாராளுமன்று (Parliament) தெரிவு செய்மன்றத்தில (House of Commons) கேள்வி கேட்டபொழுது அமைச்சரவர்களுக்காக ஹியுவின்ஸ் துரை (Mr. Hewins) சொன்ன மறுமொழியின் பேரில் இலங்கை அரசியன்முறைத்திருத்தச்சபை (Ceylon Reform League) யாரும், இலங்கைக்குடிப்பெருஞ்சபை (Ceylon National Association) யாரும் ஒருங்குகூடி ஆகஸ்டுமீ 6உ பின்வருமாறு அமைச்சரவர்கட்குக் கம்பிவழியாக அறிவித்தார்கள்.

"இலங்கை அரசியல்முறைத்திருத்தத்தைப் பற்றி பாராளுமன்று (Parliament) தெரிவு செய்மன்றத்தில (House of Commons) ஹியுவின்ஸ் துரை (Mr. Hewins) யின மறுமொழி பெரிதும் ஆத்திரத்தை யுண்டாக்கியது. இந்திய அரசாட்சியார் கடுஞ்சிக்கலும் மிகஇடைஞ்சலுமுள்ள அந்நாட்டுத்துறைகளை ஆராய்ந்து அரசியல் திருத்தமுறைகளை வெளியிட்டிருக்கும் போது இலங்கைக்கு வேண்டியவைகளை ஆராய்தற்குக் காலந்தக்கதல்லவென்று பின்போட்டதன்காரணம் விளங்கவில்லை. இலங்கைக்கு வேண்டுவனவற்றை நெடுங்காலமாகக்கருதாமல் அசட்டைபண்ணுவதையிட்டு நாம் மிகவருத்தப்படுகிறோம். பயனுள்ள ஏராளமான திருத்தங்களை விரைவாகச்செய்துதரும்படி அவாவி மன்றாடுகிறோம்."

3. ஆகஸ்டுமீ 23உ மேற்கண்ட இருசபையாரும் பின்வருமாறு இன்னும் ஓர் கம்பிச்செய்தி அனுப்பினார்கள்:—

"6-ந்தேதிக் கம்பித்தொடர்பு. இந்திய அரசியல்முறைத்திருத்தத்தைப்பற்றி பாராளுமன்று தெரிவுசெய்மன்றத்தில் (House of Commons) நடந்த பேச்சும், இந்தியாவிற்குத் தன்னரசுரிமை கொடுத்தல் தக்கதென்று ஒப்புக்கொண்டதும் தாங்கள் நினைவு கூருதற்குத் தக்கவை. இனத்திலும மரபுவழக்கிலும் தேர்ச்சியிலும் இந்தியாவோடு ஒருப்பட்டதும். அரசியல் திருத்தங்கட்குரிய தகுதிவசதிகளில் மிகச்சிறந்ததுமான இலங்கைக்கும் அப்படியே தன்னரசுரிமை தகுமென்று ஒப்புக்கொண்டு இந்தியாவிற்குக்கொடுக்கும் உரிமைகளைக் குறையாமற் கொடுக்கும்படி கேட்கிறோம். இவ்வுரிமைகட்கு அடிப்படையான ஒழுங்குகளை அமைச்சரவர்களே அமைத்து அவ்வமைப்பிற்குத்தக்கவைகளை ஆராய்ந்து செய்யும்படி எமகன் புதிய ஆட்சித்தலைவர் (Governor) அவர்கட்குக் கற்பிக்கவேண்டுகிறோம். இந்தியாவிற்குக்கொடுத்தபடி இலங்கைக்குங் கொடுக்கவேண்டுமென்று நாங்கள் விதப்பாகக் கேட்பவையாவன:—

(க) மக்கட்பரப்பால் தெரிந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் பெருந்தொகையாகவுள்ள சட்டசபையும் (Legislative Council).

(உ) இலங்கைமக்களை உறுப்பினராகக் கொண்ட அதிகாரமந்திரசபையென்னும் அரசியல் கொண்டுநடாத்துஞ் சபையும் (Executive Council).

(ங) இலங்கைமக்கள் தலைவராக அமையப்பெற்ற தொழிற்றுறைகளும் (Departments).

(ச) இலங்கைமக்கட்குப்பொறுத்த அளவாக உயர்ந்த அதிகார வரிசைகளும் (Higher Appointments).

(ரு) குடிகளின் முழு ஆட்சிக்குட்பட்டு குடிகளால் தெரிவு செய்யபபட்ட தலைவரையுடைத்தாய நகர்நலந்தெரி சங்கம் (Municipality), உள்ளூர்ச்சபை முதலியவை.

ஆகிய இவைகளே.

4. வருகிற டிசம்பர்மீ 13ஆந்தேதி வெள்ளிக்கிழமையும், 14-ந்தேதி சனிக்கிழமையும், இத்தீவின் பலபாகங்களிலுமுள்ள ஊர்ப்பொதுநலச்சபைகளெல்லாம் ஒன்றுசேர்ந்து ஒரு பெருங்கூட்டங்கூடுவார்கள். அக்கூட்டத்தின நோக்கம், மேற்கண்ட இரண்டாங்கம்பிச்செய்தியிற்குறித்த முறைகளை உறுதிப்படுத்தி அதிற்கேட்டகேள்விகளை மீண்டுங்கேட்டலும், இத்தகைய பொதுநலப்பெருங்கூட்டம் ஆண்டுதோறுங்கூடுதற்குத்தக்க ஏற்பாடு செய்தலுமாம்.

5. இக்கம்பிச்செய்தியில் நீங்கள் தெரிந்துகொள்ளத்தக்கது, இலங்கைக்கு வேண்டிய அரசியன்முறைத்திருத்தத்தைப்பற்றிய அடிப்படையான ஒழுங்குகளை அமைச்சரவர்களே அமைத்து நமது புதிய ஆட்சித் தலைவரவர்களுக்கு அவ்வமைப்பிற்குத் தக்க வகைகளை ஆராய்ந்து செய்யக் கற்பிக்கும்படி நாங்கள் கேட்டிருப்பதேயாம். இந்தியாவின தலைமை அமைச்சரும் இந்திய ஆட்சி முதல்வரும் இப்படியே இந்தியாவிற் கற்பித்திருக்கிறார்கள். இதனைச் சிலநாள்கட்குமுன்னர் அவர்களால் வெளியிடப்பட்ட "இந்திய அரசியன்முறைத் திருத்தம்" (Report on Indian Constitutional Reforms) என்னும் புத்தகத்திற் காணலாம். அப்புத்தகம நமமுடைய வேலைக்களத்தில் ஒருரூபா விலையாக வாங்கலாம்.

6. மார்கழிமீ வரப்போகிற பெருங் கூட்டம் எல்லா வகுப்பினராலுக் தெரிந்தெடுக்கப்பட்ட பெருந் திருவாளரைப் பொருந்தியதாக விருத்தல்வேண்டும். ஆகவின் அதற்காகச் செயத்தக்க செய்வதன்பொருட்டு அடியிற் கண்ட பெரியார் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

வழிப்படுத்து மன்றத்தார்.
(Organizing Committee.)

ஸர். பொ. அருணசலம் நைட் பட்டவர்த்தனர்
(மன்றத்தலைவர்.)

ஜேம்ஸ் பீரிஸ், இ. ஜே. சமரவிக்ரம, எ. செசற். வீ. ஜயவர்த்தன, டபின்யு. ஏ. டி. சில்வா, ஜே. டபின்யு. டீ சில்வா, எவ். ஆர். சேனநாயக, எம. ஏ. அருளானந்தன், பிரான்ஸிஸ் டீ சொயிசா, அமதோறிஸ் மெண்டிஸ், டி. ஆர் விஜயவர்த்தன. (செயலாளர்.)

7. இப்பொழுது இத்தீவின் பலபாகங்களிலுள்ள ஊர்ப்பொதுநலச சங்கங்களினதும், மார்கழிமாதத்திற்கு முன்பு இவைபோ லுண்டாக்கப்படுஞ் சங்கங்களினதும் உறுப்பின ரனைவரும் அப்பெருங்கூட்டத்தில் சேர்ந்துழைக்கத் தகுதியுடையவராவர். இலங்கையின் நன்மையை விரும்பிய ஒவ்வொருவரும் இத்தீவின் முன்னேற்றத்தை விளைவித்தற்குரிய நிலைமையைப் பெற்றுக்கொள்ளுதற்குக் காலம் இதுவேயாம். இதுவரையும் இபபொழுதிருக்குஞ் சபைகளின் உறுப்பினராகாதிருப்பவர்கள் இலங்கை அரசியல் முறைத்திருத்தச்சபை (Ceylon Reform League) அல்லது இலங்கைக் குடிப்பெருஞ்சபை (Ceylon National Association) அல்லது இவைபோன்ற அவ்வவ்வூரிலுள்ளஏதாவதுஊர்ப் பொதுநலச்சபை யொன்றில உடனே சேர்ந்துகொள்ளல்வேண்டும். சபையில்லாத இடங்களில புதிய சபையை உண்டுபண்ணி விரைவில் அதனை நமக்குத் தெரிவித்தல் வேண்டும்.

8. மார்கழிமாசக்கூடும் பெருங்கூட்டத்தில் நீங்கள் வந்துசேர்ந்து ஒத்துழைத்தலை அவாவுடன் வேண்டிக்கொள்ளுகிறோம.

இங்ஙனம்,
டி. ஆர். விஜயவர்த்தன,
வழிப்படுத்துமன்றச் செயலாளர்.

## அடைவு நகைவிற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவுபிடிக்கும் திரிகோணமலை 6-ம் நம்பர் காசுக்கடை வீதி முருகுப்பிள்ளை தாமோதரம்பிள்ளை, நாகலிங்கம், இராசலிங்கம், சுப்பிரமணியம் என்பவர்களிடமும், டிை-ஊர் 6-ம் நம்பர் காசுக்கடைவீதி சரவணமுத்து வேன்மயில்வாகனமிடமும் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி டிைசட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டியனவாகிய நகைகளின் விபரம்:

| இல. | ஆண்டு | மாசம். | தேதி | ரூ. | சத. | அடைவுவைத்தவர் ஊரும்பெயரும். | அடைவுப்பொருளின் விபரம். |
|---|---|---|---|---|---|---|---|
| 39 | 1915 | புரட்டாதி | 20 | 10 | | 8-ம் நம்பர், வை. கந்தையா [ச. விசுவலிங்கம்) | சிகப்புக்கடுக்கன் சோடி 1 |
| 50 | | | 24 | 330 | | 8-ம் நம்பர், க. கதிர்காமத்தம்பி (சொந்தக்காரர் | பதக்கம் 1 சந்திரகாரம் 1 |
| 107 | | ஐப்பசி | 18 | 6 | | கொட்டியாபுரம் சின்னத்தம்பி சீனி | பழையதண்டை சோடி 1 பழுது |
| 108 | | | 18 | 20 | | தோப்பூர், பக்கீரிப்பிள்ளை அசனுலெவ்வை | அறுக்குத்து 20 அரிசிவிழுந்தது [சோடி 1 டிை |
| 121 | | | 23 | 22 | | உப்புவெளி, க. நாகலிங்கம், | பதசவுக்கமணி 1 ஓடாணக்குண்டில்லை தோடு |
| 174 | | கார்த்திகை | 11 | 15 | | 8-ம் நம்பர், வல்லிபுரம் முத்து | சிவப்புக்கடுக்கன் சோடி 1 சுரையில்லை |
| 252 | | மார்கழி | 10 | 6 | | 3-ம் நம்பர், நாராயணர் அண்ணாமலை | கொப்புச்சிமிக்கி சோடி 1 |
| 268 | | | 14 | [illegible] | | 8-ம் நம்பர், ஐயம்பிள்ளை அம்பலவர் | ஐந்து பட்டுமணிக்கோவை 1 |
| 269 | | | 15 | 25 | | 8-ம் நம்பர், தவசி சின்னக்குட்டி | பதபூரானட்டியல் 1 சுரையில்லை |
| 289 | | | 18 | 22 | 50 | 2-ம் நம்பர், கந்தப்பர் காளியப்பு | சம்புராத வளையல் 1 |
| 342 | | | 30 | 13 | | 1-ம் நம்பர், நாகப்பர் முத்துக்குமாரு | வெள்ளிக்கொலிசு சோடி 1 |
| 353 | | | 31 | 8 | | கிலாவெளி, சின்னப்பொடியன் வெள்ளையன் | வெள்ளிக்கொலிசு சோடி 1 |
| 363 | 1916 | தை | 2 | 90 | | 5-ம் நம்பர், நாகப்பர் வல்லிபுரம் | பத கல்லட்டியல் 1 கல்விழுந்தது |
| 389 | | | 6 | 15 | | சி. இனியா, அச்சுப்பிள்ளை சேகுமதார் | காலுபட்டுமணி 1 பின் இல்லை வெள்ளி அரைக்கு |
| ,, | | | ,, | ,, | | | காப்பு சோடி 1 சுரையில்லை பழுது |
| 474 | | | 17 | 40 | | 7-ம் நம்பர், கோணாமலை தம்பு [அ. குமரசேகரம்) | வைரக்கடுக்கன் சோடி 1 சுரையில்லை |
| 483 | | | 17 | 45 | | 8-ம் நம்பர், ஐயம்பிள்ளை கதிர்காமன் (சொந்தக்காரர் | பத பூரானட்டியல் 1 கல்விழுந்தது |
| 597 | | மாசி | 6 | 8 | | 5-ம் நம்பர், குமாருமகன் லக்ஷுமிப்பிள்ளை | வெள்ளிக்கொலிசு சோடி 1 |
| 747 | | பங்குனி | 15 | 109 | 50 | 8-ம் நம்பர், கனகசபை கதிர்காமத்தம்பி | கங்கணம் சோடி 1 |
| 770 | | | 21 | 15 | | 9-ம் நம்பர், வல்லிபுரம துரைச்சாமி | வெள்ளி பாதசரம் சோடி 1 |
| 863 | | சித்திரை | 10 | 22 | | 8-ம் நம்பர், கனகசபை கதிர்காமத்தம்பி | சுடர்த்திருகுபூ 1 இதட்டிருகுபூ 1 |
| 864 | | | 10 | 12 | 50 | 8-ம் நம்பர், கனகசபை கதிர்காமத்தம்பி | குண்டுவைத்த பவுண் 1 |
| 982 | | வைகாசி | 4 | 90 | | 8-ம் நம்பர், கனகநாயகம் இராஜசுந்தரம் | பத பூரானட்டியல 1 |
| 1014 | | | 10 | 12 | | 1-ம் நம்பர், கார்த்திகேசு கதிரைவேற்பிள்ளை | தோடு சோடி 1 செவுடு 1 வெள் அரைஞாண் 1 |
| 1080 | | | 23 | 91 | | 6-ம் நம்பர், ஆறுமுகம் சின்னையா | பத திருக்கொன்றைமணி 1 பாதசரம் சோடி 1 |
| 1235 | | ஆடி | 3 | 6 | | சுருவேலி, பத்தினியான் வேலாயுதம | பழையசிறு சவுக்கமணி 1 |
| 1283 | | | 15 | 15 | | சாம்பல்தீவு, ஆழ்வார் இராசையா | வெள்ளிக்கொலிசு சோடி 1 |
| 1329 | | | 29 | 6 | | 8-ம் நம்பர், கதிரைவேற்பிள்ளை தம்பிமுத்து | வெள்ளித் தண்டை சோடி 1 |
| a 13 | | ஆவணி | 7 | 10 | | சாம்பல்தீவு, முருகர் கந்தையா | தோடு சோடி 1 |
| a 14 | | | 7 | 20 | | 6-ம் நம்பர், சின்னவி ஆறுமுகம் | சுற்றேறு சோடி 1, குஞ்சம் 3 |
| a 15 | | | 7 | 50 | | 1-ம் நம்பர், பொன்னையா சுவாமிநாதபிள்ளை | பதக்கமுடன் பூரானட்டியல் 1, ருசகொடி 1, |
| a148 | | புரட்டாதி | 9 | 20 | | 5-ம் நம்பர், கதிர்காமர் சின்னர் | மயிர்மாட்டி சோடி 1 |
| a223 | | | 30 | 7 | | 11-ம் நம்பர், சண்முகம் கனகரத்தினம் | தோடு சோடி 1 நசியல் |
| a257 | | ஐப்பசி | 11 | 18 | | 10-ம் நம்பர், அகமது காதறுசா | சிரகப்பூவுடன் ஐந்து பட்டுமணிக்கோவை 1 |
| a322 | | | 24 | 50 | 04 | 1-ம் நம்பர், பொன்னையா சுவாமிநாதபிள்ளை | சம்புராதவளையல் 2 |
| a341 | | | 26 | 50 | 04 | 1-ம் நம்பர், பொன்னையா சுவாமிநாதபிள்ளை | சம்புராதவளையல் 2 நசியல் |
| a344 | | | 27 | 7 | | 1-ம் நம்பர், இளையதம்பி கதிரைவேலு | தோடு சோடி 1 நசியல் |
| a390 | | கார்த்திகை | 1 | 6 | | 5-ம் நம்பர், குமாருமகன் லக்ஷுமி (சொந்தக்காரர் கா. சுப் | சுடர்த்திருகுபூ 1 முறியல் [பழுது |
| a442 | | | 7 | 7 | | குச்சவெளி சு. சின்னத்தம்பி [பிரமணியம் 6-ம் நம். | சிமிக்கி சோடி 1, வெள்ளித்தண்டை சோடி 1 |
| a455 | | | 8 | 12 | | திரியாய், கயவாகு சிற்றம்பலம் | பழைய சவுக்கமணிக்கோவை 1 |
| a479 | | | 11 | 9 | | 7-ம் நம்பர், இபுறுயின் சுபூதீன் | வளையற்றடுகு எட்டு, பூ எட்டு |
| a605 | | | 22 | 12 | | 6-ம் நம்பர், அருணாசலம் முத்துக்குமாரு | சவுக்கமணிக் கோவை 1 [விழுந்தது |
| a608 | | | 22 | 60 | | 8-ம் நம்பர், ஐயம்பிள்ளை கதிர்காமன் | இன்பழுதான கல்லட்டியல் 1 சுரையில்லை கல் |
| a612 | | | 23 | 220 | | 8-ம் நம்பர், ஐயம்பிள்ளை வைரமுத்து | பவுண்மாலை 1 |
| a636 | | | 26 | 50 | 04 | 1-ம் நம்பர், பொன்னையா சுவாமிநாதபிள்ளை | சம்புராதவளையல் 2 |
| a696 | | மார்கழி | 1 | 40 | 04 | 5-ம் நம்பர், நல்லதம்பி இராசையா | சுற்றேறு சோடி 1 |
| a713 | | | 2 | 60 | 04 | 1-ம் நம்பர், பொன்னையா சுவாமிநாதபிள்ளை | கொன்றைமாலை 1 |
| a814 | | | 9 | 15 | 04 | 1-ம் நம்பர், பொன்னையா சுவாமிநாதபிள்ளை | வெள்ளி பாடகம் சோடி 1 |
| a823 | | | 11 | 50 | | 6-ம் நம்பர், கணபதிப்பிள்ளை குமாரசாமி (சொந்தக்கா | பத திருக்கொன்றைமணி 1 |
| a940 | | | 24 | 7 | | 8-ம் ,, மா. சுமசிவாயப்பத்தர் [ரர் சு. கனகரத்தினம்) | சுற்கொப்புச்சிமிக்கி சோடி 1 |
| a974 | | | 30 | 25 | | 5-ம் நம்பர், நாகமணி சிவஞானப்பத்தர் | சிறுகல்லட்டியல் 1 |
| a975 | | | 31 | 10 | | 5-ம் நம்பர், குமாருமகள் லக்ஷுமிப்பிள்ளை | ஆறு பட்டுமணி 1 |

திரிகோணமலை 6-ம் நம்பர் காசுக்கடைவீதி சரவணமுத்து வேன்மயில்வாகனமிடம்.

| இல. | ஆண்டு | மாசம். | தேதி | ரூ. | சத. | அடைவுவைத்தவர் ஊரும்பெயரும். | அடைவுப்பொருளின் விபரம். |
|---|---|---|---|---|---|---|---|
| 51 | 1915 | ஐப்பசி | 15 | 6 | 00 | குழந்தைவேலு குமாரசாமி, 7-ம் நம்பர் | பொன் காப்பு 1 [பொன்மின்னி 1 |
| 145 | | கார்த்திகை | 22 | 6 | 04 | அவுதக்காதர் அளிபுலெவ்வை, இனியா | சுர்வாளி சோடி 1, பொன் காதுப்பூ சோடி 1, |
| 194 | | மார்கழி | 6 | 7 | 50 | சின்னவாப்பு செயினும்சா, கொட்டியாபுரம் | பஞ்சாயுதமணிக் கோவை 1 |
| 222 | | | 11 | 16 | 04 | முகமதுத்தம்பிமரக்காயர் செய்யதுமுகமது, சி.இனியா | பூசாந்தரமுடன்மணி 4பொன்காதுப்பூ சோடி 1 |
| 272 | | | 22 | 10 | 04 | காத்தார் சின்னையா (சொந்தக்காரர் கந்தப்பா மகள் | குவளைக்கடுக்கன் சோடி 1 |
| 279 | | | 23 | 6 | 50 | அ. அளிபுலெவ்வை இனியா [கற்பகம்) 10-ம் நம்பர் | வெள்ளி தண்டை சோடி 1 |
| 882 | 1916 | ஆடி | 29 | 10 | 04 | வேலு சின்னத்தம்பி 6-ம் நம்பர் | கல்மயிர்மாட்டி சோடி 1 |

விற்பனவு:—1918-ம் ஆண்டு டிசெம்பர்மாசம் 18-ந் தேதிக்குச் சரியான காலயுத்தி௵ மார்கழிமாசம் ௩-ந்தேதி புதன்கிழமை காலை 10-மணியளவில் டிை-யூர் காசுக்கடைவீதி 6-ம நம்பர் கடைத்திண்ணையிலும், அடுத்தநாள் ௪-ந் தேதி (19-12-18) வியாழக்கிழமை காலை 10-மணியளவில் டிை-கடைத்திண்ணையிலும் எடுபட்ட நகை நீங்கலாக பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். வி. பொ. விசுவநாத உடையார், டெப்ஸ்மேஸ்தர்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க,
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்

☞ Printed and published by S. T. M. P. Sithambaranatha Chettiar, for the Proprietors at the SaivaPrakasa Press, Jaffna.